Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-05 | 22-10-2005 | சனிக்கிழமை | ஓசை-247


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12955)

# புலிகளின் விமான ஓடுபாதையை விழுந்த விமானம் படம் பிடித்ததாம்

## சிங்கள நாளிதழ் தகவல்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளுடைய இரணைமடு விமானத்தள ஓடுபாதையை படம் பிடித்து விட்டு திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே வவுனியாவிலிருந்து 23 வான் மைல் தொலைவில் வேவு விமானம் வீழ்ந்து நொருங்கியதாக லங்காதீப சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.**

மேலும் அச்செய்தியில்; இரணைமடு ஓடுபாதை நிழல் படங்கள் முழுவதையும் நடவடிக்கைத் தலைமையகத் திற்கு அனுப்பி விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த வேளையி லேயே விமானம் வீழ்ந்து நொருங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு முன்னரும் இது போன்ற மூன்று விமானங்கள் உடைந்து வீழ்ந்துள்ள போதிலும் இயந்திரமும் ஏனைய உபகரணங்களும் ஒரேயடியாக இயங்க மறுத்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகுமென விமானப்படைப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த புதன்கிழமை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான ஆளில்லாத வேவு விமானம் ஒன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வீழ்ந்துநொருங்கியதும் அதனை ஓர் போர்நிறுத்த உடன்பாட்டிற்கு முரணானதென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் கூறியிருந்ததும் தெரிந்ததே.

## நோர்வே வாழ் இலங்கைத் தமிழர்கள் ஒஸ்லோவில் தீப்பந்த எழுச்சிப் பேரணி

"எழுவோம் தமிழின உரிமைக்காக" எனும் பொங்குதமிழ் தீப்பந்த எழுச்சிப்பேரணி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. 1,500 இற்கும் மேற்பட்ட நோர்வே வாழ் தமிழ் மக்கள் இந்த எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டு தமிழ்தேசிய ஒருமைப்பாட்டின் பலத்தினையும், உணர்வெழுச்சியினையும் வெளிப்படுத்தி னார்கள். தமிழீழ தாயக மக்களின் நீதியானதும் உண்மை யானதுமான விடுதலைக்காக தமது ஒருமித்த குரலை புதிய நோர்வே அரசாங்கத்திற்கும் அனைத்துலக சமூகத்திற்கும் வலியுறுத்தினார்கள்.

அடைமழையுடன் சீரற்ற காலநிலை நிலவிய போதும், சிறுவர்கள், இளையவர்கள், பெரியவர்கள், முதியவர்கள் என நோர்வேயின் பல்வேறு நகரங்களிலுமிருந்தும் வந்து பெருந் திரளான மக்கள் பொங்குதமிழ் தீப்பந்த எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டனர்.

நோர்வே அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தமிழ் சர்வ மத குருமார் மற்றும் பேராளர்களின் உரைகள் இடம்பெற்ற தைத் தொடர்ந்து பொங்குதமிழ் எழுச்சிப் பாடல்களும் இசைக்க ப்பட்டன. தொடர்ந்து சமாதானத்திற்கான (14ஆம் பக்கம் பார்க்க)






# இராணுவத் தளபதியின் பதவிக்காலம் சனாதிபதியால் நீடிக்கப்படுமா?

சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதியாக அண்மையில் பதவியேற்ற சாந்த கொட்டே கொடவின் பதவிக் காலத்தை சனாதிபதி சந்திரிகா நீடிக்கலாம் என்ற சந்தேகம் எழுந் துள்ளது.ஆயினும், எதிர்வரும் ஐந்தாம் திகதி முடிவடையும் இராணுவத் தளபதியின் பதவிக்காலத்தை நீடிக்குமாறு சனாதி பதி சந்திரிகாவை பாதுகாப்பு அமைச்சகம் கேட்டுக்கொண்டு ள்ளது.

இது தொடர்பான கோப்புக்களை படைத்துறை பணியாளர் பொறுப்பதிகாரியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜயவர்த்தன அனுப்பிவைத்துள்ளார்.மேஜர் ஜெனரல் பொன்சேகாவின் படைத்துறைப் பணியாளர் பொறுப்பின் பணிக்காலமான மூன்றா ண்டு காலமும் டிசம்பர் 8ஆம்திகதியுடன் முடிவடைகிறது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதி மேலும் 5800 பேருக்கு மீளளிப்பு

இவ்வாண்டு மேலும் ஐயாயிரத்து எண்ணூறு (5800) பேருக்கு கார்த்திகை மாதம் தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளதாக விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.கடந்த ஆவணி மாதத்தில் 12700 பேருக்கான தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை தெரிந்ததே .வழமைபோல் கடன் மீளளிக்கப்படுவோர் பெயர் விபரம் ஈழநாதம் நாளேட்டில் வெளிவரும் என அறியத்தருகின்றோம்

## கைக்குண்டு வைத்திருந்ததாக பேலியகொடவில் மூவர் கைது!

பேலியகொட பகுதியில்கைக்குண்டு வைத்திருந்தாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேலியகொட கெலனிட்டிசபுர பகுதியில் ஒருவீட்டில் கைக்குண்டுகள் இருப்பதாகக்கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு அந்த வீட்டில் சிறி லங்கா காவல்துறையினரும் படையினரும் சோதனை நடத்தினர்.

அச்சோதனையில் கைக்குண்டு (14 ஆம் பக்கம் பார்க்க)

## யுவதியின் கைப்பையிலிருந்த இரண்டு இலட்சம் ரூபா பணம்திருட்டு

(வலிகாமம்)

பேருந்தில் பயணித்துக்கொண்டிருந்த யுவதி ஒருவர் கைப்பையி னுள் வைத்திருந்த இரண்டு இலட்சம் ரூபா பணத்தைக் களவு கொடுத்தபரிதாபச் சம்பவம் ஒன்று நேற்றுயாழ். நகரில் இடம்பெற்றுள்ளது.பருத்தித்துறை வீதி இருபாலைச் சந்திய டியைச் சேர்ந்த இராசதுரை-கார்த்திகா என்ற யுவதியே இவ்வாறு தனது பணத்தைப் பறிகொடுத்துள்ளார். (14ஆம்பக்கம்பார்க்க)

## யாழ். பேருந்து நிலைய பழவியாபாரிகளிடம் விசாரணை

யாழ் மத்திய பேருந்து நிலையத்தை அண்டிய பகுதிகளில் பழ வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளை நேற்றுக்காலை இராணுவத்தினர் துருவித் துருவி விசாரணைக்குட்படுத்தினர்.

யாழ். மின்சார நிலைய வீதி, யாழ். வைரவர் கோவில் வீதி ஆகிய வீதியோரங்களில் பழ வியாபாரத்தில் ஈடுபடும் பழ வியாபாரிகளின் பழங்களை கிளறிப் பார்த்துச்சோதனைகளை மேற்கொண்டதோடு, அவர்கள் வைத்திருந்த வெற்றுப்பெட் டிகள், பைகள் என்பவற்றையும் துருவித் துருவி ஆராய்ந்தனர். யாழ் மத்திய பேருந்து நிலையத்தைச் (14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரசெல்ஸில் பேரணிக்கு தடைவிதிக்க வேண்டும்!

### ஆனந்தசங்கரி கோரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய ஒன்றியத்தின் பயணத் தடையை நீக்கக் கோரி பிரசெல்ஸில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள பேரணிக்குத் தடைவிதிக்க வி. ஆனந்தசங்கரி கோரியுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தின் அனைத்துத் தலைவர்களுக்கும் எழுத்து மூலம் வி. ஆனந்த சங்கரி இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

## தமிழ் தேசிய எழுச்சி நிகழ்விற்கு திருமலை மக்கள் பாரிய ஒத்துழைப்பு

### தமிழ் பா. உ. கள் படைத்துறையினர் சந்திப்பு

திருமலையில் தமிழ் தேசிய எழுச்சிக்குரிய ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட் டுள்ள தாகவும், அதற்கான ஏற்பாடுகளில் ஏற்பாட்டுக் குழுவினருடன் தமிழ் மக்கள் பாரிய அளவில் ஒத்துழைப்பை வழங்கிவருவதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. இதன் ஒரு கட்டமாக நேற்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், படைத் தரப்பிற்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

படைத்தரப்பில் 22ஆவது படைத்தளபதி பிரிகேடியர். சுமித் பால சூரிய, கிழக்குப் பிராந் திய துணை காவல்துறை மா அதிபர் ரொஹான். ஏ.ரட்ண, ஆகியோரும் தமிழ் தேசியக் (14 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் அரச செயலகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறிலங்காப் படையி னரால் கைதாகிக் காணாமல் போனோரது பெற்றோர், பாதுகாவலர்கள் இணைந்து நேற்று யாழ். அரச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

சனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்த பின்னர் யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் விளைவாக இங்கு பல இளைஞர் யுவதிகள் படையினரால்கைது செய்யப்பட்டுக்காணாமல் போயுள்ளனர்.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் (14 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

புகைப்படத்துறையில் புதிய நுட்பங்களை உருவாக்கக் கூடிய **Adobe Photoshop** வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. தொடர்புகளுக்கு:-வின்நெற் கணனி பயிற்சிநிலையம், டிப்போவீதி, கிளிநொச்சி. (சி.13074)

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள இரண்டு இஞ்சின்கள் England Lister (16hp, 12hp ) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு சுதா அரைக்கும் ஆலை, புளியடிச்சந்தி, விசுவமடு. (6858)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -இலங்கை
கலைப்பீடம்
முழுநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா
கற்கைநெறி-2005/2006

### விளம்பரத் திருத்தம்

மேற்படி கற்கைநெறிக்கான விளம்பரத்தில் "விண்ணப்பங்கள் அரசாங்கப் 'பாடசாலைகளில கடமையாற்றும்பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும்..." என்பதை "மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தனியார் பாடசாலைகளில கடமையாற்றும்பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும்...." எனத்திருத்தி வாசிக்கவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2005.10.23 (சி.13110)

## 03-10-2005 முதல் 01-11-2005 வரை

SALE SALE SALE SALE



தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருட்களுக்கும்
விசேட கழிவு
உடனே விஜயஞ்செய்யுங்கள்:

### லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
☎ 222 2381

தீபாவளித் திருநாளை முன்னிட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிறும், 30 ஆம்திகதி ஞாயிறும் விசேடமாக கடை திறந்திருக்கும். (சி-13090)

## 05ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் | தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|---|---|---|
| 14 - 06 - 1976 |  | 22 - 10 - 2000 | 12 - 01 - 1982 |  | 22 - 10 - 2000 |

தமிழீழ காவல்துறை
உப பரிசோதகர்
**சிவலிங்கம் ஜெயக்காந்தன்**
செல்வநாயகபுரம்,
அச்சுவேலி,யாழ்ப்பாணம்.

தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர்
**யோசேப்பு அன்ரனிஜெயந்தன்**
17ஆம், கட்டை,
வள்ளிபுனம்,புதுக்குடியிருப்பு.

**கிளாலி,எழுதுமட்டுவாள் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடிமோதலின் போது 22.10.2000 அன்று வீரச்சாவடைந்தனர்.**

எண்ணித்துணிந்தீர் கருமம் தோழர்களே-தலைவன்
எண்ணியாங்கு ஈடேற உழைத்தீர்களே
பண்ணிய விடுதலைப் போர்ப்படை முன்னரங்கிலே-நீங்கள்
திண்ணிய தோள்வலிகாட்டி வித்தாகி வீழ்ந்தீர்களே.

அண்ணனவன் வேதம் படிந்து எழுந்தீர்களே-எங்கள்
அன்னைத்தமிழ் ஈழம் மலரும் சபதம் முடித்தீர்களே
வண்ணத்தமிழ் ஈழத்தின் விடிவெள்ளிகளே-நீங்கள்
உண்மைத் தமிழன் உள்ளவரை உலகில் வாழ்வீர்களே.

தமிழீழ காவல்துறையினர் (6816)

## சாவு அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 18 |  | 21 |
| 05 | | 10 |
| 1923 | | 2005 |

### செபஸ்ரியன் (கோயில்பிள்ளை)

இல.20 இரத்தினபுரத்தை சொந்தமுகவரியாகக் கொண்ட செபஸ்ரியன் (கோயில்பிள்ளை) என்பவர் 21.10.2005 அன்று காலமானார். இவர் மைக்கலம்மாவின் அன்புக்கணவரும், அன்ரனிதாஸ், யோன்பப்ரிஸ், யேசு கபிரியேல்,சிந்தாத்துரைச்செல்வம், அலெக்சாஇண்டர் ஆகியோரின் பாசமிகுதந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் 22.10.2005 இன்று பி.ப 2 மணியளவில் நல்லடக்கத்திற்காக திருநகர் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:-
யோன்பப்ரிஸ்(மகன்),
கிராமஅலுவலர்.

(6422)

Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | solidar An INGO consortium including NPA, SAH and ASB

## கூறுவிலை கோரல்

செம்பியன் பற்று வடக்கிலேயோ அல்லது வத்திராயனிலேயோ (வடமராட்சி கிழக்கு) சுனாமியால் அழிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைத்தல்.

ஏ.எஸ்.பீ., என்.பீ.ஏ. மற்றும் எஸ்.ஏ.எச். ஆகிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமாகிய சொலிடாரினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செம்பியன்பற்று வடக்கிலும், வத்திராயனிலும் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்காக சீல் வைக்கப்பட்ட கூறு விலைப்பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றீர்கள். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் 20 தொடக்கம் 50 வீடுகள் தத்தமது தராதரத்திற்கும் தகுதிக்கும் ஏற்றவாறு கட்டவிரும்புவோரை இதில் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஒப்பந்தக்காரர்கள் கூறுவிலைப்பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கீழ் காணும் முகவரியில் ரூபா 3000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி கூறு விலை விண்ணப்பப்படிவங்களும், ஆவணங்களும் 26.10.2005ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**Solidar/ ASB Construction Office,**
**160 Mile Post,**
**Farm Point,**
**A9 Road,**
**Paranthan.**

தொலைபேசி – 021 228 5147 (சி-13103)

ஒக்ரோபர் வாசிப்பு மாதம்

*கற்றலும், கற்பித்தல் சூழலும்*

வாசியுங்கள்

ஆசிரியர்களுக்கான மாத இதழ்

## அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு

வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு
AHAVILI,3,Torrington Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

## திருநெல்வேலியில் ஓர் புதிய உதயம்


பூமியில் புதிதாக கால்பதிக்கும் உங்கள் குழந்தையை வரவேற்க....





குழந்தைகளுக்கான
* பால்மா வகைகள்
* உடைகள்
* விளையாட்டுப்பொருட்கள்

உட்பட உங்கள் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்தையும் மற்றும் தாய் மார்களுக்கான பொருள்களையும் ஒரேகூரையின் கீழ் அதிசயிக்கத்தக்க மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்.




## Mother And Baby Care

**108/1,palaly Road, Thirunelvely.T.P:0717556677**

# சதாம் ஹுசைன் மீது விசாரணை தொடங்கியதை தாம் வரவேற்பதாக சொல்கிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

**சதாம் ஹுசைன் மீது விசாரணை தொடங்கியுள்ளதை அமெரிக்கா வரவேற்றுள்ளது. சனநாயக ஈராக்கை உருவாக்குவதில் இது ஒரு முக்கிய திருப்பம் ஈராக்கில் கடந்த காலத்தில் நடந்த இருண்ட நிகழ்வுகளுக்கு ஒரு முடிவு ஏற்படும் என்று அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது.**



இது குறித்து வெள்ளை மாளிகையின் செய்திப் பிரிவு செயலர் ஸ்காட் மெகல்லன் கூறியதாவது:-

ஈராக் நீதிமன்று முன் சதாம் ஹுசைன் நிறுத்தப் பட்டுள்ளார். ஈராக் மக்கள் மீது அவர் நடத்திய கொடூர தாக்குதல்களுக்கும் மனித இனத்துக்கு எதிராக நடந்த அட்டூழியங்களுக்கும் சதாம் தான் காரணம் என்று ஈராக் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சட்டத்தின் ஆட்சியின் படி சனநாயக ஈராக்கை உருவாக்க இந்த விசாரணை ஒரு முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது. ஈராக்கில் மீண்டும் சட்டத்தின் ஆட்சி ஏற்பட்டு வருகிறது என்பதற்கு இந்த விசாரணையே ஒரு உதாரணமாக திகழ்கின்றது.

சிறப்பு நீதிமன்றை ஈராக் மக்கள் தான் அமைத்துள்ளனர். சர்வதேச சட்டத்தின் சில விதி முறைகளின் கீழ் இந்த நீதிமன்றில் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடந்து வருகிறது.

கடந்த காலத்தில் நடந்த இருண்ட நிகழ்வுகளால் ஈராக் மக்கள் மிகவும், பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விசாரணையின் மூலம் இதற்கு ஒரு முடிவு ஏற்பட்டு விடும். இருண்ட நிகழ்வுகளின் போது உயிரிழந்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை தற்போது நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். சதாம் ஹுசைனின் கொடூரமான ஆட்சி நடந்த போது ஏராளமான ஈராக் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

துஜெயில் என்ற நகரில் நடந்த படுகொலைகள் குறித்ததான விசாரணை தான் முதலில் நடக்கிறது. அந்த நகரில் நூற்றுக்கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் சுற்றி வளைக்கப்பட்டனர். கொடுமைப் படுத்தப்பட்டனர். பின்னர் கொல்லப்பட்டனர் இது குறித்து தான் விசாரணை நடக்கிறது என்றார்.

# பாகிஸ்தானுக்கு உதவ அனான் வேண்டுகோள்

(நியூயோர்க்)

பாகிஸ்தானுக்கு உடனடியாக மேலதிக உதவிகள் தேவை. இல்லையேல் அகதிகள் மத்தியில் இறப்புக்கள் நிகழலாம் என ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த எட்டாம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தால் பாகிஸ்தானில் மூன்று மில்லியன் மக்கள் அகதிகளாக்கப்பட்டிருக்கின்றார்களா. வீடுகளையும் இழந்துள்ளார்கள் இவர்களுக்கு உடனடி நிவாரணம் தேவை எனவும் அனான் சுட்டிக் காட்டினார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் பாகிஸ்தானுக்கு உதவுமாறு ஐ.நா விடுத்த வேண்டுகோளை ஏற்க பல நன் கொடையாளர்கள் உதவுவதற்கு முன் வந்துள்ளனர் இது பாராட்டுக்குரியது என்றும் அவர்களிடம் இருந்து 320 மில்லியன் டொலரே கிடைத்துள்ளது. இது எம்மால் எதிர்பார்க்கப்பட்ட தொகையில் ஒரு பகுதியே ஆகும். இது போதுமானதாக இல்லை எனக் குறிப்பிட்டார்.

# சதாமுடன் குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் கடத்திக் கொலை

(பாக்தாத்)



ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனின் உடன் குற்றம் சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் கடத்திக் கொலை செய்யப்பட் டுள்ளார்.

சதாமிற்கு எதிராக நடத்தப்பட்டு வரும் கொலைக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணையில் சதாம் தரப்பு பக்க நியாயங்களை எடுத்து வாதிட்ட வழக்கறிஞர் சடவன் நசோலப் அல்-ஜனாவியே கடத்தி கொலை செய்யப்பட்டவர் எனத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் இவர் தனது அலுவலகத்தில் இருந்த வேளை இனந்தெரியாதோர் இவரைத் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றதாகவும், பின்னர் இவரை சுட்டுக் கொன்று விட்டதாகவும், ஈராக் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுபற்றிய மேலதிக தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

# மட்டுப்படுத்த முயற்சித்தும் சீனப்பொருளாதாரம் உயர்ச்சி

(பீஜிங்)

சீனாவின் பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்த சீன அரசாங்கம் முயற்சி எடுத்த போதிலும், இந்த ஆண்டு முதல் ஒன்பது மாதங்களிலும், சீனப் பொருளாதாரம் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த ஆண்டை விட 9.4 சதவீதம் கூடுதலான பொருளாதார வளர்ச்சியை சீனா கண்டுள்ளது என்று புள்ளி விபர தேசிய பணிமனை கூறுகிறது. பொருளாதார உறுதி நிலையை பாதிக்கும் விதத்தில் வர்த்தகச் சமநிலை இன்மை இருந்து வருவதாகவும், கூறப்படுகின்றது.

சீனா முதலீடுகளிலும், ஏற்று மதிகளிலும தங்கியிருப்பதிலிருந்து ஒதுங்கி இருப்பதை குறைத்து கொள்வதற்கு முற்படுகிறது. விவசாயம், அரச செலவீனங்களின் அதிகரிப்பு ஆகியன பற்றியும் சீனா கவலை கொண்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

# புளோரிடாவை நெருங்குகிறது 'வில்மா' ஹைத்தி தீவை புயல் தாக்கி 10 பேர் பலி

(மியாமி)

அமெரிக்காவின் அதிக மக்கள் தொகை கொண்ட மாகாணமான புளோரிடாவை "வில்மா" என்றும் புயல் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், அடுத்து என்ன நடக்குமோ என மக்கள் பீதியடைந்துள்ளனர். இதற்கிடையில் மெக்சிக்கோவின் யுகாடன் தீபகற்பத்தை நேற்று 'வில்மா' நெருங்கியது.

கடந்த ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் கற்றினா, றீற்றா என்ற சூறாவளிகள் அமெரிக்காவைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்தின. இதில் ஏராளமானோர் பலியாகினர். இந் நிலையில் அடுத்ததாக வில்மா என்ற புயல் உருவாகி யுள்ளது. கரீபியன் கடலில் தண்ணீர் வெப்பமடைந்ததால் இந்தப் புயல் உருவாகியுள்ளது. இந்தப் புயல் மிகவும் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும் நான்காவது ரக புயலாக உருவெடுத்துள்ளது. மெக்சிக்கோ வளைகுடா அருகே நேற்று முன்தினம் காலை இந்தப் புயல் மையம் கொண்டிருந்தது. ஆனாலும் இந்தப் புயல் சற்று பலவீனமடைந்துள்ளதாக கூறப்படுகின்றது. இருந்த போதிலும், பேராபத்தை ஏற்படுத்தும் நான்காவது ரகத்திலிருந்து மாறவில்லை. 'வில்மா' புயல் முதலில் ஹைத்திதீவை கடந்த புதன் தாக்கியது.

இதில் நிலச்சரிவு ஏற்பட்டு 10 பேர் பலியாகினர். அது கியூபா மற்றும் மெக்சிக்கோ நாட்டின் யுகடான் தீபகற்பப் பகுதியை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. வில்மா நகரும் பாதையில் அடுத்ததாக இருக்கும் முக்கிய நகரம் அமெரிக்காவின் புளோரிடா மாகாணம். இங்கு அதிக அளவில் மக்கள் வசிக்கின்றனர். இன்னும் சில நாட்களில் இந் நகரை 'வில்மா' தாக்கினால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும் என்று அச்சம் ஏற்பட்டுள்ளது. அங்கு மக்கள் பீதியடைந்து பாதுகாப்பு ஏற்பாடுகளில் தீவிரமாக உள்ளனர்.






காடன் குடாநாட்டை அண்மித்துக் கொண்டிருக்கும் நான்காவது வகையான வில்மா சூறாவளியை NOAA என்ற செய்மதி எடுத்த படம்.

# வைத்தியசாலை கட்டடம் இடிந்து 10 பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் மருத்துவமனை கட்டடத்தின் மேல்தளம் இடிந்து விழுந்ததில் 10 பேர் இறந்தனர். அவர்களில் பலர் நோயாளிகள் இருவர் மருத்துவமனை ஊழியர்கள். மேலும் 12 பேர் படுகாயமடைந்தனர். நேபாளத்தின் மேற்கு பகுதியில் உள்ள பொகராவில் இந்தப் பயங்கரம் நடந்தது.

# துருக்கியில் பூகம்பம் பதினைந்து பேர் பலி

## 100 இற்கு மேற்பட்டடோர் காயம்

துருக்கியில் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. இதில் சில வீடுகள் இடிந்தன. இடிபாடுகளில் சிக்கியும், மாடியில் இருந்து குதித்ததிலும், 15 பேர் பலியானார்கள்.

துருக்கியில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் லேசான நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கத்தில் வீடுகள் அதிர்ந்தன. ஆனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. மக்கள் பயத்துடனேயே இரு நாட்களைக் கழித்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இஸ்மீர் பகுதியில் பூமி அதிர்ந்தது இது ரிச்டர் அளவில் 5.9 பதிவானது.

இதில் வீடுகள் இடிந்து விழுந்தன. நள்ளிரவில் வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள். சிலர் மாடிகளில் இருந்து கீழே குதித்தனர்.

பூகம்பத்தில் வீடுகள் இடிந்ததிலும், மாடிகளில் இருந்து குதித்ததாலும், சிலர் பலியானார்கள். நிலநடுக்கம் ஏற்பட்ட பீதியிலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மாரடைப்பிலும், சிலர் பலியானார்கள்.

இதுவரை 15 பேர் பலியானதாக இஸ்மிர் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். 100 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளனர். வீடுகளை விட்டு வெளியே ஓடியவர்கள் மீண்டும் வீடுகளுக்கு திரும்பாமல் நடு வீதியிலேயே தஞ்சம் அடைந்துள்ளனர். அங்குள்ள பாடசாலைகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1999 ஆம் ஆண்டு துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தில் 18 ஆயிரம் பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.

# இரு உலக யுத்தங்களில் பங்கு பற்றிய ஆஸி. வீரர் 106 ஆவது வயதில் மரணம்


(மெல்போர்ன்)

உலகில் நடைபெற்ற இரு பெரும் உலக மகா யுத்தங்களில் இராணுவத்தில் பணியாற்றிய அவுஸ்திரேலியர் ஒருவர் 106ஆவது வயதில் கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார். வில்லியம் இவான் எலன் என்ற இந்த முன்னாள் இராணுவ வீரர் தனது 14 ஆவது வயதில் 1914 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய றோயல் கடற் படையில் சேர்ந்தார். அதன் பின் எச்.எம்.ஏ.எஸ்.என் கவுண்டர் எனும் கடல் படைக் கப்பலில் 1918 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

இக் கப்பல் முதலாவது உலகப் போரில் இராணுவக் கப்பல் அணிகளுக்கு பாதுகாப்பு அளித்தது. அத்துடன் ஜேர்மன் யுத்தக் கப்பல்களை கண்காணித்தது. இப்படியாக 34 ஆண்டுகள் கடற்படையில் பணி புரிந்த இவர் பின் இரண்டாம் உலகப் போர் காலத்திலும், இராணுவத்தில் பணி புரிந்தார். இக் காலப் பகுதியில் அவுஸ்திரேலிய விமானம் தாங்கிக் கப்பலில் தன் பணியை தொடர்ந்தார். இதன் பின் 'இவான்' லெப்டினன்டாக பதவி உயர்வு பெற்று பின் ஓய்வு பெற்றார். இவரது உடல் மெல்போர்னில அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படுமென அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

# தமிழ்தேசிய எழுச்சி மாநாடு நடத்தப்படுவது ஏன்?

# ஐ.நா.முகவர் அமைப்புக்களுக்கு சம்பந்தன் விளக்கம்



(திருகோணமலை)

**இலங்கை குடியேற்ற நாடாக மாறுவதற்கு முன் மூன்று இராஜதானிகள் இருந்தன. அதில் ஒன்று தமிழ் இராச்சியம். வெளிநாட்டார் நாட்டைக்கைப்பற்றி தமது நிர்வாக வசதிக்காக மூன்று இராச்சியங்களையும் ஒன்றுபடுத்தி ஒற்றையாட்சி அரசமைப்பை அறிமுகப்படுத்தினர். பின்னர் நாட்டிற்கு சுதந்திரம் கிடைக்க மூவின மக்களும் உழைத் தனர். சுதந்திரம் கிடைத்ததும் பெரும்பான்மை இனம் ஆட்சியைக் கைப்பற்றி ஒற்றையாட்சி அரசமைப்பினைப் பயன்படுத்தி சிறுபான்மை இன மக்களின் உரிமைகளைப்பறித்தது. அகிம்சைவழியில் உரிமைகளைப் பெறப் போராடிய தமிழ் மக்கள் மீது அரசபடையினர் வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டனர். இதனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். புலிகள் அமைப்பு இராணுவ பலம்வாய்ந்த அமைப்பாக மாறி மரபுவழி இராணுவமாக மாறியுள்ளது. இதையடுத்தே யுத்தநிறுத்தம் வந்ததென வரலாற்று நிகழ்வுகளை ஐ.நா.முகவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு விளக்கினார் தமிழ்கூட்டமைப்புத்தலைவர் இரா.சம்பந்தன்.**

இவ்வாறு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை திருகோணமலை கிருஷ்ணதாஸன் ஞாபகார்த்த மண்டபத்தில் திருமலையில் பணியாற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் யுனிசெப், யு.என்.எச்.சி.ஆர் போன்ற ஐ.நா முகவர்களின் பிரதிநிதிகளுக்கு சனிக்கிழமை நடைபெறவிருக்கும் தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டு நிகழ்வின் நோக்கம் பற்றி விளக்கமளிக்கும் போது குறிப்பிட்டார்.

மனித உரிமை ஆர்வலரான சட்டத்தரணி கா.சிவபாலன் தலைமை வகித்தார். திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் பங்குபற்றினார். பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் மேலும் கூறியதாவது;

"தற்போதுள்ள ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் தமிழ்தேசிய பிரச்சினைக்கு தமிழ் பேசும் மக்களின் சட்டபூர்வமான அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதான அரசியல் தீர்வு எதனையும் காணமுடியாது என்பதைத்தான் நாட்டின் தற்போதைய நிச்சயமற்ற அரசியல் நிலவரம் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது."

"கடந்த சிலவருடங்களாக இந்த நாட்டின் அரசியலில் நடந்தவை, நடப்பவை, நடக்க விருப்பவை பற்றி அறிந்து கொள்வதற்கு முன்னர் தமிழ்தேசியப் பிரச்சினை எவ்வாறு உருவானது என்பது பற்றி சுருக்கமாக தெரிந்து கொள்ள வேண்டும்.

"குடியேற்ற நாடாக மாறுவதற்கு முன்பு இலங்கையில் மூன்று ராஜதானிகள் இருந்தன. அவற்றில் ஒன்று தமிழ் இராச்சியம். குடியேற்ற நாடாகிய பின்னர் நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த வெளிநாட்டார் நிர்வாக வசதிக்காக மூன்று இராச்சியங்களையும் ஒன்றாக்கினர். ஒற்றையாட்சி அரசமைப்பை அறிமுகப்படுத்தினர். நாட்டிற்குச் சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்பதில் இனமத பேதமின்றி மூன்று இனங்களைச் சேர்ந்த மக்களும் உழைத்தனர்.

"ஒற்றையாட்சி அரசமைப்பு பெரும்பான்மையினத்தவர்களின் ஆட்சியைக் கொண்டு வந்தது எண்ணிக்கையில் குறைந்த சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. இந்திய மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. 1956 தனிச்சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

வரலாற்று ரீதியான தமிழ்பேசும் மக்களின் வாழ்விடங்களில், மத்தியில் இருந்த பெரும்பான்மையினத்தின் அரசாங்கத்தினால் பெரும்பான்மையின மக்கள் அரச உதவியுடன் குடியமர்த்தப்பட்டனர். திட்டமிட்ட இந்த நடவடிக்கையால் தமிழ்பேசும் மக்களின் வாழ்விடங்களின் இன விகிதாசாரம் குறைந்தது. நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் ஒரு சிங்கள பிரதிநிதியைக் கூடத் தெரிவு செய்யாத கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட குடியேற்றத்தினால் சிங்கள எம்.பிக்கள் தெரிவானார்கள்.

1949ஆம் ஆண்டிலேயே சமஷ்டி அரசமைப்பைக்கோரி சமஷ்டி கட்சி ஆரம்பிக்கப்பட்டது. சமஷ்டி அரசமைப்பே பல்லின மக்களின் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் என்று வலியுறுத்தப்பட்டது. பண்டா-செல்வா, டல்லி-செல்வா உடன்படிக்கைகள் தமிழ் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக உருவாக்கப்பட்டன. பேரினவாதச் சக்திகளினால் அவை கிழித்தெறியப்பட்டன. அகிம்சை வழியில் உரிமைகளைப் பெறப் போராடிய தமிழ்மக்கள் மீது அரச படையினர் வன் செயல்களைக் கட்டவிழ்த்து விட்டனர்.

இதனால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். விடுதலைப்புலிகள் இராணுவப்பலம் வாய்ந்த அமைப்பாகமாறினர். விடுதலைப் புலிகள் அமைப்பு மரபுவழி இராணுவமாக மாறியது. அதனையடுத்தே யுத்தநிறுத்தம் வந்தது. அந்த யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளை அரசியல் நீரோட்டத்துக்குள் கொண்டுவரக் கூடியதான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கத்தவறியுள்ளது.

மூன்று வருடங்கள், எட்டு மாதங்களாக நடைமுறையிலிருக்கும் யுத்தநிறுத்த காலத்தில் அரசியல் கட்டமைப்பு மற்றும் ஆட்சிக் கட்டமைப்பு உருவாக்கம் பெறவில்லை.

பேரினவாத சக்திகளினால் இடைக்கால நிர்வாகம், கடற்கோள் பொதுக்கட்டமைப்பு ஆகிய யோசனைகள் முடங்கிப் போயுள்ளன. வடக்கு கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் கல்வி, அபிவிருத்தி தொழில்வாய்ப்பு ஆகியவற்றில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள்.

"எமக்கு இடைக்கால நிர்வாகம் தேவை, எமது பிரதேச அபிவிருத்திப் புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகளைக் கவனிக்க தனியான கட்டமைப்புத்தேவை, பேச்சுவார்த்தை மூலம் தமிழ் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணவேண்டும்.

"தமிழ் தேசிய எழுச்சிமாநாடு நிகழ்வின் மூலம் தமிழ்பேசும் மக்கள் அரைநூற்றாண்டுக்கு மேலாக தாம் அனுபவித்து வரும் துன்ப துயரங்களைச் சர்வதேச சமூகத்திற்கு உணர்வு பூர்வமாக தெரிவிப்பதேயாகும்" என்று சம்பந்தன் மேலும் விளக்கிக் கூறினார். (25)

## சர்.சேமிப்பு நாளையொட்டி ஒக்-24-30 வரை சேமிப்பு வாரம்

சர்வதேச சேமிப்பு நாளையொட்டி (ஒக்ரோபர் -30) சேமிப்பு வாரத்தினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்திவங்கி கடைப்பிடிக்கவுள்ளது.

இச்சேமிப்பு வாரம் ஒக்ரோபர் 24ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படும். இச்சேமிப்பு வாரத்தினை பற்றிய ஊடகவியலாளர்கள் சந்திப்பினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி காலை 10.00மணிக்கு கிளிநொச்சி வட்டக்கச்சியில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியகத்தில் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெறவுள்ளது.

## முழங்காவில் பகுதியில் தொழில் பயிற்சி ஆரம்பம்

முழங்காவில் பகுதியில் றீடோ நிறுவனத்தால் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிராம அபிவிருத்திச்சபை மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் 25மாணவர்களுக்கு வெளிஇணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சி வழங்கப்படுகிறது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதியினை உலகக்கனேடிய பல்கலைக் கழக சேவைநிறுவனம் வழங்குகிறது.

## நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் காக்காச்சி வெட்டையில் கண்சிகிச்சை

இலங்கை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் இலவச கண் சிகிச்சைமுகாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர்களின் வைத்திய சேவையுடன் காக்காச்சிவெட்டையில் நேற்று முன்தினம் 18ஆம் திகதி இடம்பெற்றது. இதில் 500இற்கும் மேற்பட்டோர் சிகிச்சையினைப் பெற்று மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மேலும் இச்சிகிச்சைகள் தும்பங்கேணியிலும், களுவாஞ்சிக்குடி மகிழூரிலும், புல்லுமலை யிலும், புலிபாய்ந்த கல்லிலும் இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை இம்மாதம் 23ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பிரதேசங்களிலும் ஒரு வாரம் குறித்த வைத்தியசேவைக் குழு தங்கியிருந்து இலவச கண் சிகிச்சை முகாமை நடாத்தவுள்ளதாகவும் நலவாழ்வு அபிவிருத்தி நிர்வாகத்தைச் சேர்ந்த கேசவரூபன் தெரிவித்துள்ளார்.

## முன்பள்ளி ஆசிரியருக்கு ஈருருளிகள் வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

முல்லை. அகதிகள் புனர்வாழ்வு கழகத்தாலும் பொருண்மிய மதியுரையகத்தாலும் நடைமுறைப்படுத்தப்படும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஐ.ஓ.எம்.நிறுவன நிதயுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் இருபது ஈருருளிகள் வழங்கப் பட்டுள்ளன.

இந்நிகழ்வு கடந்த புதன்கிழமை காலை 10.00மணிக்கு முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச முன்பள்ளி கல்வி மேமபாட்டு நிலைய தலைவர் ரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

## கற்சிலைமடு, முத்துஐயன்கட்டு பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்கள் திறப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கோட்டத்தில் நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட இரண்டு பாடசாலைக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.



கடந்த புதன்கிழமை காலை கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் பாடசாலை அதிபர் அருமைச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிபர் அலுவலகக் கட்டடத்தை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாஜினி கந்தை[illegible] நாடாவை வெட்டித் திறந்து [illegible] அதனை அடுத்து நூலகத்தினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் திறந்து வைக்க விஞ்ஞான ஆய்வு கூடத்தினை துணுக்காய் வலய கல்விப்பணிப்பாளர் குரூஸ் அவர்களும் மாணவர்களின் வகுப்பறைகளை முல்லை.மாவட்ட கல்விக்கழ கப் பொறுப்பாளர் சுடர், ஒட்டு சுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி ஜெயபாலன் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார் தொடர்ந்து ஆசியுரைகளை உதவி அரச அதிபர் சுபாஜினி கந்தையா, துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் குரூஸ் ஆகியோர் வழங்கினர். சிறப்புரையினை முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் வழங்கினார். நண்பகல் முத்துஐயன்கட்டு இடதுகரை பாடசாலை யில் பாடசாலை அதிபர் கருணாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிபர் அலுவலக அறையினை துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் குரூஸ் நாடாவெட்டித்வைத்திறந்து வைக்க, நூலகத்தினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நாடாவை வெட்டித் திறந்து வைக்க, விஞ்ஞான ஆய்வு கூடத்தினை துணுக்காய் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பரந்தாமன் திறந்து வைத்தார்.

ஆசியுரைகளை ஒட்டுசுட்டான் உதவி அரசஅதிபர், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர், துணுக்காய் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர், முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினர். (05)





கண்டாவளைப் பிரதேச முன்பள்ளிகளின் சிறுவர்களுக்கான வருடாந்த திறனாய்வுப் போட்டிநிகழ்வுகளின் போது தருமபுரம் ஈழவேந்தன் முன்பள்ளியில் இருந்து முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட்வாத்திய இசையுடன் முக்கிய பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதையும், நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர் சி. சத்தியசீலன் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதையும், அருகில் அருட்தந்தை பி. தேவராசா நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்–வதனன் )

# திருமலை தமிழ் எழுச்சி நிகழ்வின் மூலம் ஒன்றுபட்ட உணர்வலைகளை உணர்த்துவோம்

**–திருமலை கல்வி மேம்பாட்டுப் பேரவை**

(திருமலை)

**திருகோணமலையில் இன்று நடைபெறும் தமிழ் எழுச்சி நிகழ்வின் மூலம் ஒன்றுபட்ட உணர்வலைகளை உலகத்திற்கு உணர்த்துவோம் என திருகோணமலை கல்வி மேம்பாட்டுப் பேரவைவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையினைத் தொடர்ந்து நீடிக்க முடியாத தன்மையை தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு உரியவர்களுக்கும் முழு உலகிற்கும் உணர்த்த வேண்டியது காலத்தின் தேவையெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை வெளிப்படுத்த நடத்தப்படும் தமிழ் எழுச்சி நிகழ்வில் புத்திஜீவிகள், ஆசிரியர்கள்,பெற்றோர்கள், மாணவர்கள் ஆகிய அனைத்து தரப்பினரும் கலந்துகொண்டு முழு உலகத்திற்கும் உணர்த்த வேண் டும் எனவும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (32)

# இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கை யாழ்.மாவட்டத்தில் அதிகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் இராணுவரோந்துநடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேசங்கள் மற்றும் கிராமங்களில் இராணு வத்தினர் கால் நடையாகவும் துவிச்சக்கரவண்டிகளிலும் தொடராக தமது ரோந்துப்பணிகளை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர். இதேவேளை யாழ்.நகரப்பகுதிகளிலும் மற்றும் புறநகர்ப்பகுதிகளிலுமுள்ள பிரதான வீதிகளில் பெருமளவு இராணுவத்தினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டு வீதிப்போக்கு வரத்துச்சோதனைகளை தீவிரப்படுத்தி வருகின்றனர். இச்சோதனை நடவடிக் கைகளின்போது, மக்கள் செறிந்த நகர்பகுதிகளில் யுத்தகளத்தில் நிற்பது போன்று இராணுவத்தினர் சுடு நிலைகளிலேயே தமது துப்பாக்கிகளை வைத்து மக்களை மிரட்டி வருகின்றனர். (37)

# குப்பைகளை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமது பகுதிகளில் தேங்கும் குப்பைகளை உடன் அகற்ற யாழ்.மாநகர சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் யாழ்.மாநகரசபையிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. பிறவுண்வீதி, ஆத்திசூடிவீதி, இந்து மகளிர் வீதி, ஐந்தாம் ஒழுங்கை போன்ற பகுதிகளில் குப்பைகள் தேங்கிக் கிடப்பதாகவும் இவை உரிய நேரத்தில் அகற்றப்படாததால் இப்பகுதிச் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாகவும், எனவே இப்பகுதிக் குப்பைகளை தேங்கவிடாது அகற்ற யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (28)

# மிதிவெடி அகற்றப்பட்டபகுதி தனங்கிளப்பில் மக்கள் பாவனைக்கு

சாவகச்சேரி, தனங்கிளப்புப் பகுதியில் படையினரால் புதைக்கப்பட்ட வெடிபொருட்களில் சிறுபகுதி அகற்றப்பட்டு அந்தப் பிரதேசம் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் பல ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களில் படையினரால் வெடிபொருட்கள் புதைக்கப்பட்டு உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரால் பாதுகாக்கப்பட்டு வரும் சூழலில் 450 ஏக்கர் வயல் பிரதேசத்தையே மக்களிடம் கையளிக்க படையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

தனங்கிளப்பு சாவகச்சேரிவீதிக்கு மேற்காக உள்ள சிறுபகுதியை மட்டுமே படையினர் வழங்க உள்ளதாகவும் ஏனைய பகுதிகளைத் தொடர்ந்தும் படையினர் பாதுகாத்துவருவதால் பெருமளவான விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (28)

# படுகொலைகளைக் கட்டுப்படுத்த பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை

**-மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி**

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் படுகொலைச் சம்பவங்களும் பொதுமக்கள் மீதான அச்சுறுத்தல் சம்பவங்களும் அதிகரித்து வருகின்ற போதும் இவற்றைக்கட்டுப்படுத்தும் நோக்கில் சிறிலங்காப் பொலிசாரோ அல்லது படையினரோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்டஅதிகாரி ரோகிதபிரியதர்சன குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொலிசாரும் படையினரும் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய தமது கடமையில் இருந்து தவறியுள்ளமை காரணமாக சமூகத்தொண்டர்களும் புத்திஜீவிகளும், பொதுமக்களும் பாதுகாப்புத் தேடி தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

முற்று முழுதான இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசமான யாழ். மாவட்டத்தில் கடந்த ஒருமாதகாலத்துள் 12கொலைச்சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இதில் யாழ்ப்பாணப் பொலிஸ்பிரிவில் நான்கு கொலைச்சம்பவங்களும், சுன்னாகம் பொலிஸ்பிரிவில் நான்கு கொலைச்சம்பவங்களும், நெல்லியடி,கோப்பாய், அச்சுவேலி,பருத்தித்துறை போன்ற நான்குபொலிஸ் பிரிவுகளிலும் தலா ஒவ்வொரு கொலைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இதைவிட பொதுமக்கள் புத்திஜீவிகள் சமூகப்பணியாளர்கள் மீது கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கும் சம்பவங்களும் யாழ்மாவட்டத்தில் அதிகரித்துள்ளன.

எனினும் இதனைக்கட்டுப்படுத்தவோ அல்லது குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவோ பொலிசாரும், படையினரும் தவறியிருப்பதால் மக்களது பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தல் களுக்குள்ளாகியிருப்பதால் மக்கள் அச்சுறுத்தல்களில் இருந்து தப்பிக்கொள்வதற்காகவும் சுயபாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் தலைமறைவு வாழ்க்கையை நாடவேண்டிய துர்ப் பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதைவிட பொலிசாரும், படையினரும் பொதுமக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறியுள்ளமையால் கொள்ளைச்சம்பவங்கள், குழுமோதல்கள், பாலியல் சீர்கேடுகள். எனப் பல்வேறு சமூக வன்முறைகளும் அதிகரித்து மக்களது பாதுகாப்பை பெரும் அச்சுறுத்தல்களுக்குள்ளாக்கியிருக்கிறது என்றும் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து பொதுமக்களின் முறைப்பாடுகள், குறைபாடுகள், விசாரணைத் தகவல்கள் என்பன குறித்த அறிக்கை ஒன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பியுள்ளதாகவும் இவ்அறிக்கையின் பிரகாரம் சிறிலங்காபொலிஸ்மா அதிபர் மற்றும் படைத்தலைமை அதிகாரிகளிடம் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புக்குறை பாடுகள் ஏற்பட் டுள்ளமைகான காரணங்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (33)

# விடுதிக்கு அருகில் குப்பைகள்; தொற்றுநோய் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்கு அருகாமையில் பழைய புகையிரதப் பாதையில் பொதுமக்களாலும் உணவகங்களாலும் கொட்டப்படும் குப்பைகள், கழிவுப்பொருட்கள், மாமிசக் கழிவுகளால் அருகில் உள்ள பெண்கள் விடுதி மாணவிகள் தொற்று நோய்த்தாக்கங்களுக்கு உள் ளாகும் அபாயம் உள்ளதாக மாணவி கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் இங்கு கொட்டப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகளால் இப்பகுதியெங்கும் துர்நாற்றம் வீசுகின்றது. கழிவுநீர் தேங்கிநிற்பதால் நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துள்ளது. எனவே இப்பகுதியில் குப்பைகளை கொட்டுவதை நிறுத்த சம்பந்தப்பட்ட நல்லூர் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாணவிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (28)

# மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் அவரது சொந்த விஞ்ஞாபனம்

**–பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன்**

(திருகோணமலை)

சனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ முன்வைத்திருக்கும் தேர்தல் விஞ்ஞாபனம், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடையது அல்ல சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுடையதும் அல்ல, அவரின் சொந்தமானது. உலகில் சனாதிபதித் தேர்தலில் கட்சிவேட்பாளர்கள் தங்கள் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்தே போட்டியிடுகின்றார்கள். தாம் சார்ந்த கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடவில்லை. தனது பெயரிலான விஞ்ஞாபனத்தில்தான் அவர் போட்டியிடுகின்றார்." என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரி வித்தார்.

"மகிந்த ராஜபக்ஷ ஒற்றையாட்சி அரசமைப்பு முறையின் கீழ்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாக தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருக்கிறார். மீண்டும் ஐம்பது வருடங்கள் பின்நோக்கிச் செல்வதாகவே மகிந்தராஜபக்ஷவின் சிந்தனை அமைந்துள்ளது. 'மகிந்தராஜபக்ஷ அங்கம் வகிக்கும் கட்சியின் தலைவி சமஷ்டி அரசமைப்பின்கீழ் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். ஐக்கிய தேசியக்கட்சியினரும் அதன் சனாதிபதி வேட்பாளரும் சமஷ்டி அரசமைப்பு மூலம்தான் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

மகிந்தராஜபக்ஷ மாத்திரம் தான் ஒற்றையாட்சி அரசமைப்பு மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்று கூறுகின்றார் என அவர் தெரிவித்தார்.

# பல்கலைக்கழகம் செல்லாதோர் நலன்கருதி புதிய கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்

**–கல்வியமைச்சின் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்**

(கொழும்பு)

பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதியிருந்தும் அனுமதி கிடைக்காத மாணவர்களின் நலனைக்கருத்தில் கொண்டு புதிய கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென கல்வியமைச்சின் தகவல் தொழில் நுட்ப ஆலோசகர் பிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளினால் எல்லாவற்றையும் கற்பித்துக் கொடுக்கலாம் என்ற கோட்பாடு தற்போது தோல்வியைத் தழுவியுள்ளது. எனவே நாம் ஏனைய கல்வி நிறுவனங்கள் பற்றி எமது பார்வையைச் செலுத்த வேண்டும். இதற்கு தொலைக்கல்வி பெருமளவில் உதவும் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

பல மாணவர்களுக்கு வைத்தியராகவேண்டுமென்று ஆசை, அவர்கள் மிகக் கடினப்பட்டு கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். எனினும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்து விடுவதில்லை. இந்நிலையில் அம்மாணவர்களின் கதி என்ன?

எனவே நாம் கல்வியில் சீரமைப்பு செய்வது பற்றி ஆராயலாம். கல்வியில் மறுசீரமைப்பு என்றாலே சிலர் கூக்குரல் இட்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர்ஹெறால்ட், கல்வியமைச்சின் செயலாளர் தாராடி மெல் ஆகியோருக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர்.

ஆனால் இவ்வாறானவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதியிருந்தும் அங்கு செல்லமுடியாதவர்களின் நிலைபற்றிக் கவலைப்படுவதில்லை இலங்கையிலிருந்து இலவசக்கல்வியை அகற்றும் எந்த நோக்கமும் கல்வியமைச் சிற்கில்லை.

ஆனால் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவது அவசியமாகவுள்ளது. இது கல்வியைக் கற்பதற்கான பூரண உரிமையுள்ளது. அதை அவர்கள் தனியார் பல்கலைக் கழகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

# தேர்தலை அடிப்படையாகக் கொண்டு வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது

**-ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு**

(கொழும்பு)

தேர்தலை அடிப்படையாகக் கொண்டு வரவு செலவுத் திட்டம் ஒன்று அடுத்தமாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. தேர்தல் காலத்தில் வரவு செலவுத்திட்டம் ஒன்றை முன்வைப்பது உசிதமான காரியம் அல்ல என அக்கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். தேர்தலைக் கருத்திற்கொண்டே அரசாங்கம் இந்த வரவு-செலவுத்திட்டத்தை முன் வைக்கத் தயாராக உள்ளது. கூட்டமைப்பு அரசாங்கம் கடந்த வரவு-செலவுத்திட்டத்தில் உறுதி அளித்த விடயங்கள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அந்த உறுதிமொழிகள் மக்களை ஏமாற்றுவதற்காக கூறப்பட்டவை. அவ்வாறான உறுதிமொழிகள் பல எதிர்வரும் வரவு-செலவுத திட்டத்திலும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் முன்வைக்கவுள்ளது என அவர் தெரிவித்தார். (32)

# இளைஞர் மரணம்

பஹ்ரெய்ன் நாட்டு சீமெந்துத் தொழிற்சாலையில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரான சிவகுமார் (வயது-25) என்பவர் உயிரிழந்தார்.பஹ்ரெய்ன் நாட்டின் சல்மாபாத்தில் உள்ள "டெல்மான் ரெடி மிக் ஸ்ட் கொங்கிரீட்" என்ற நிறுவனத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக சிவகுமார் பணியாற்றி வந்தார். சம்பவ நாளன்று சீமெந்துக் கலவை இயந்திரத்தின் உள்ளே இறங்கித்துப்புரவுப் பணிகளை சிவகுமார் செய்துவந்தார். அப்போது அங்கு வந்த மற்றொரு ஊழியர் இயந்திரத்துக்குள் சிவகுமார் இருப்பதை அறியாமலேயே அந்த இயந்திரத்துக்கான ஆழியை அழுத்தி இயக்கியுள்ளார் இதில் படுகாயமடைந்த சிவகுமார் சல்மானிய வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டார். தலை மற்றும் உடலில் படுகாயங்களுடன் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட சிவகுமார் செவ்வாய்க்கிழமையன்று உயிரிழந்தார்.

# வாசிப்புப் பழக்கத்தின் இன்றியமையாமை

## ஒக்ரோபர்-வசிப்பு மாதம்

பாடசாலை செல்லும் மாணவர்கள் வாசிப்பதில் ஈடுபடுகின்றார்கள் என்பது உண்மை இந்த வாசிப்பானது பாடநூல்களுடனும் வகுப்பறையில் ஆசிரியர் கொடுக்கும் குறிப்புக்களுடனும் மட்டுப்படுத்தப்படுகிறது.வீட்டிலும் பிள்ளைகள் வாசிப்பதில் ஈடுபடுகின்றார்கள். இவ்விடயத்தில் பெற்றோரின் ஊக்குவிப்பும் பாடநூல்களோடும் குறிப்புகளோடும் தொடர்பாகவே அமைந்துவிடுகின்றன.இத்தகைய வாசிப்புகள் கற்றலுடன் நேரடியாக இணைக்கப்பட்ட அம்சமாகும். இதனால் பாடசாலை மட்டப்பரீட்சைகளிலும் போட்டிப் பரீட்சைகளிலும் வெற்றிபெறுகின்றனர். உண்மையிலே வாசிப்பு என்பது இதனைக் கருதவில்லை.

பாடசாலைக் கல்விக்காலத்தில் பல்வேறு விடயங்களைக் கற்க வேண்டிய தேவை மாணவர்களுக்கு உண்டு. அவற்றுள் மிக முக்கியமானது வாசிப்புப் பழக்கமாகும். பாடசாலை செல்லும் காலத்தில் வாசிக்கும் பழக்கத்தினை விருத்தி செய்யாத பிள்ளை பிற்காலத்தில் அதனை விருத்தி செய்வான் என உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் அதற்கான விரிவான சந்தர்ப்பம் கிடைப்பது அரிதாகும். வாசிப்புப் பழக்கத்தை புதிதாக ஏற்படுத்திக் கொள்ள முடியாது.

ஒருவருக்கு வாசிப்பின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்படுவதுடன் அது வாழ்க்கைக்காலம் முழுவதும் தொடர்ந்து இடம்பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்த வேண்டும். பாடசாலைக் காலத்திலே இத்தகைய பழக்கத்தினை விதைக்கும் பொறுப்பும், போதிய ஊக்குவிப்பினை வழங்கும் பொறுப்பும் ஆசிரியரைச் சாருகின்றது. இவ்விடத்தில் எனது அனுபவம் ஒன்றைப் பரிமாற விரும்புகின்றேன். நான் இடைநிலைக்கல்விபயின்ற பாடசாலை ஒரு சிறிய பாடசாலை யாகும். அப்பாடசாலையில் இருந்த. அதிபர் புத்தாக்கச் சிந்தனையுடன் கூடிய ஒருவர். அவரால் அறிமுகப் படுத்தப்பட்ட சுற்றுவாசிப்பு முறையினால் ஒரு வருடத்தில் சராசரியாக 25 அல்லது 30 நூல்களை வாசிக்கும் வாய்ப்பு இருந்தது.அத்தகைய நூல்கள் இலக்கியம், வரலாறு, விஞ்ஞானக் கட்டுரைகள், ஆளுமையுள்ள மனிதர் பற்றிய கட்டுரைகள், பொது அறிவு போன்ற பல்துறை விடயங்களாக அமைந்தன.

சிறுவயதில் ஏற்பட்ட வாசிப்புப் பழக்கம் க.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தரம் கற்கும் மாணவர் மத்தியில் சாதகமானதொரு போட்டியையும் உருவாக்கியது.

இத்தகைய பழக்கத்தினை எமது ஆசிரியர்கள் ஏற்படுத்தியதன் பலாபலன்களை நன்கு உணர்கின்றேன்: அனுபவிக்கிறேன். பல்கலைக்கழகத்தில் எனது கற்றல்-கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றிற்கு சிறந்தொரு அடித்தளம் இதுவே யாகும்.

ஏதாவது தொழிலில் வெற்றி கண்ட நூற்றுக்கணக்கான தொழிலதிபர்களிடம் காணப்படும் குணாதிசயங்கள் பலவற்றில் வாசிப்பும் ஒன்றாக இடம்பெற்றிருக்கும். இத்தகையோர் தமது துறைசார்ந்த நூல்களை வாசிப்பதில் தேர்ச்சியுடையவராக மட்டுமன்றி, ஏனையவற்றையும் வாசிக்கின்றனர்.சில தொழின்மையாளர்கள், வாசிப்பின் ஈடுபாட்டினால் துறைகளை மாற்றிக் கொண்டமையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். பல மருத்துவர்கள் ஆக்க இலக்கியகாரராகவும் பொறியியலாளர்களாகவும் சமூகவியலாளராகவும், அரசியல் வாதிகளாகவும் மாறியுள்ளமையைக் காண்கிறோம். வாசிப்பின் வழியிலேயே அவர்களது சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட விபரங்கள் பல ஆய்வு முடிவுகளில் இருந்தும் சொந்த அனுபவங்களில் இருந்தும் பெறப்பட்டவை.இன்று பேச்சாளர்களாகவும், அறிஞர்களாகவும் ஆராய்ச்சி யாளராகவும் சமூக மற்றும் கலை இலக்கிய விமர்சகர்களாகவும் பிரபல்யமடைந்து அவ்வத்துறைகளில் தமது பெயர்களை நிலை நாட்டிக் கொண்ட பலரின் பின்புலத்தை நோக்கும் பொழுது, அவர்கள் சிறந்த வாசகர்களாக இருந்துள் ளனர் என்பது தெரியவந்துள்ளது. இத்தகையோர் இவ்வுயர் நிலைமைகளை எய்துவதற்கு உதவிய காரணிகளைப் பட்டியலிட்டுக் கூறமுடியும் ஒன்று அவர்களுடைய கல்விக்காலத்தில் பெற்ற சிறந்த வகுப்பறைப் போதனை, சிறந்த விரிவுரைகள். இரண்டு அவ்வாறு பெற்றுக்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட அறிவினைத் தமது சுயசிந்தனைகள், விரும்பி ஏற்றுக் கொண்ட அரசியல், பொருளாதார, சமூக, இலக்கிய சித்தாந்தங்கள் என்பவற்றோடு இணைத்துப் புதிய கருத்துக்களை உருவாக்கும் முயற்சி.

இவற்றுக்குள் அப்பால் தனது துறையிலும் அதற்கு மேலுமுள்ள தொடர்புபட்ட துறைகளிலும் புதிய விடயங்களை அறிந்துகொள்ள வேண்டுமென ஊக்கமுடன் செயற்பட்டு உருவாக்கிக்கொண்ட வாசிப்புப் பழக்கம். இத்தகைய பழக்கமானது ஒருகுறுகிய முறையில் தனது துறையை நோக்காது பன்னெறி சார்ந்த புலமையோடு அத்துறையை நோக்கி அதுசார்ந்த பல புதிய பரிமாணங்களைக் காணவேண்டும் என்ற ஊக்கலானது பரந்த வாசிப்புப் பழக்கத்துக்கு ஒருவரை இட்டுச்செல்கின்றது.

வாசிப்புப் பழக்கத்தினால் ஏற்படக் கூடிய பரந்த புலமைசார் நிலைப்பாட்டிற்கு ஒரு சிறு எடுத்துக்காட்டைக் கூறலாம். இன்று மரபுவழி வந்த வரலாற்றுப் பாடத்துக்குப் பதிலாகத் தோன்றியுள்ள புதிய வரலாறு என்னும் வரலாற்றியல் கருத்திற்கும் வரலாற்றுக் கல்விக்கும் சமூகவியல் மானுடவியல், உளவியல் பொருளியல்,அரசறிவியல் போன்ற நெறிகள் சார்ந்த அறிவு தேவைப்படுகின்றது. இவ்வாறு வரலாற்றைப் புதிய முறையில் நோக்குவதற்கு முதலிரண்டு வழிமுறைகளைவிட வாசிப்புப் பழக்கமே அறிஞர்களுக்குப் பெரிதும் துணையாக இருந்து வந்துள்ளது.

இன்றைய கல்விச் சிந்தனைகளில் பிரதானமானது கல்வி ஒரு குறிப்பிட்ட வயதுடனோ அல்லது ஒரு கல்வி நிறுவனத்துடனோ முடிந்து விடுவதில்லை. அறிவுவெள்ளம் பல்கிப் பெருகும் இன்றைய நாட்களில் புதிய அறிவுத் தளங்களுடன் எம்மைத் தொடர்பு படுத்திக் கொள்ள கல்வி அறிவைப் பெறும் முயற்சி வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும் என்பதாகும். இக்குறிக்கோளுக்கு உறுதுணையாக அமையும் வழிமுறை வாசிப்புப் பழக்கமாகும்.

இப்பின்புலத்தில் இன்று கல்வியை இளையோர் மத்தியில் பரப்புவதை வாழ்தொழிலாக்கொண்ட இலட்சக் கணக்கான ஆசிரியர்கள் (பாடசாலை பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர்கல்லூரிகள் என்பனவற்றைச் சேர்ந்தவர்கள்) பல்கிப் பெருகும் பல்துறைசார்ந்த அறிவுத் தொகுதியுடன் தம்மை இணைத்துக்கொள்வதற்கான பிரதான வழிமுறை வாசிப்புப் பழக்கமாகும். இன்று பல இலட்சக்கணக்கான நூல்கள், சஞ்சிகைகள், கலைக்களஞ்சியங்கள் என்பனவற்றில் மாத்திரமின்றி இணையத்திலும் எழுத்தில் விபரித்துக் கூறமுடியாத அளவுக்கு நவீன அறிவும், ஆய்வு முடிவுகளும் சேமித்து வைக்கப்படுகின்றன. வாசிப்புப் பழக்கத்தினூடாகவே இப் பேரறித் தளங்களை நாம் தரிசித்துப் பயனடைய முடியும்.

**இன்றைய கல்விச் சிந்தனைகளில் பிரதானமானது கல்வி ஒரு குறிப்பிட்ட வயதுடனோ அல்லது ஒரு கல்வி நிறுவனத்துடனோ முடிந்து விடுவதில்லை அறிவுவெள்ளம் பல்கிப் பெருகும் இன்றைய நாட்களில் புதிய அறிவுத் தளங்களுடன் எம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ள கல்வி அறிவைப் பெறும் முயற்சி வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும் என்பதாகும். இக்குறிக்கோளுக்கு உறுதுணையாக அமையும் வழிமுறை வாசிப்புப் பழக்கமாகும்.**

நன்றி:-அகவிழி

# மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செயற்படுகிறது

*— மகிந்த தரப்பு புகார்*

சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனம் செயற்படுவதாக புகார் கூறப்பட்டுள்ளது.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க தனது ஊழியர்களுக்கு விடுத்த அறிவுறுத்தலில் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை தொடர்பான செய்திகளை முதன்மைப்படுத்த வேண்டாம் என்று கூறியதாக மகிந்த தரப்பு குற்றம்சாட்டுகிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நெருக்கமானவர் ஹட்சன் சமரசிங்க என்பதால் அவரது அறிவுறுத்தலின் பேரில். ஹட்சன் செயற்பட்டிருக்கலாம் என்று மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

முன்னதாக மகிந்தவின் ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீரவும் இதே போன்ற குற்றச்சாட்டை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு எதிராகத் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன அறிவுறுத்தலின்படியே ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க செயற்படுவதாகவும் பாரபட்சமற்ற வகையில் அரச ஒலிபரப்பு இருக்க வேண்டும் என்றும் கடந்த வாரம் அலரி மாளிகையில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர். சந்திப்பில் மங்கள சமரவீர கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு நகரசபை மைதான குண்டுவெடிப்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணை

1999 ஆம் ஆண்டு சனாதிபதியின் மீது கொழும்பு நகர சபை மைதானத்தில் வைத்து குண்டுத்தாக்குதல் நடத்தியமை தொடர்பான சாட்சியங்களைப் பதிவு செய்யும் நிகழ்வுகள் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

1999 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சனாதிபதி உட்பட 84 பேர் காயமடைந்தனர்.26 பேர் பலியாகினர்.இதேவேளை சந்தேகநபர்களை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரி நெவில் குருகே நேற்று சாட்சியமளித்தார்.

தற்கொலைக் குண்டுதாரியான மலர் என்பவருக்கு உதவி வழங்கியதாகக் கூறி வழக்கில் நான்கு பேர் சட்டமா அதிபரினால் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# தெற்கில் தொடர்மழை காலநிலை அவதான நிலையம் எச்சரிக்கை

தெற்கில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் களுத்துறை, பாலந்துருவர பிரதேசத்தின் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக கலவான மத்துகம பிரதான வீதியின் மிதலன பிரதேசத் துக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. உடுதும்பரை வகுர, மொரகாதென்ன, கலகிட்டிய போன்ற [illegible]ில பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.நேற்றும் [illegible]றுமுன்தினமும் இரவு இந்தப் பிரதேசதங்களில் [illegible] மழை வீழ்ச்சி காணப்பட்டதாக பொதுமக்கள் [illegible]வித்தனர்.இந்த நிலையில் பிரதேசத்தில் தொடர்ந்தும் [illegible] பெய்யுமானால் வெள்ள அபாயம் ஏற்படக்கூடும் [illegible] காலநிலை அவதான மையம் எச்சரித்துள்ளது.

# ம.மா சபை தலைவர் பதவியிலிருந்து நீக்கம்

மத்திய மாகாண சபை தலைவர் துரை மதியுகராஜா பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்.மத்திய மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்த போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபைத் தலைவரை பதவியிலிருந்து விலக்கும் யோசனை ஒன்றை முன்வைத்தனர். இந்த நிலையில் மத்திய மாகாண சபையின் 58 உறுப்பினர்களில் 31 உறுப்பினர்கல் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். இதனையடுத்து சபைத் தலைவர் மதியுகராஜா பதவி விலக இணக்கம் தெரிவித்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க அரசியல் நடவடிக்கைகள் காரணங்களுக்காக துரை மதியுகராஜாவை பதவியில் இருந்து நீக்கியதாக தெரிவித்தா.

# தேர்தல் முடியும் வரை புத்தாக ஆட்சேர்ப்பு இல்லை

சிறிலங்கா அரச சேவைகளில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்சேர்ப்புக்கள் தவிர சனாதிபதித் தேர்தல் முடியும்வரை வேறு ஆட்சேர்ப்புக்கள் எதனையும் மேற்கொள்வதில்லையென்று நிதித் திட்டமிடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.தற்போது சேவையிலுள்ளவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.புதிதாக யாரையும் சேர்த்துக்கொள்ள வேண்டாமென்றும் பதவி உயர்வுகளை வழங்க வேண்டாமென்றும் அனைத்து அமைச்சுச் செயலாளர்களுக்கும், மாகாணசபை செயலாளர்களுக்கும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் நிதியமைச்சின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

தேர்தலுக்கென வேட்புமனுத்தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் தொடங்கப்பட்ட வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள், அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுக்களின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகள், இந்தத் தீர்மானத்திற்குள் உள்ளடங்காது என்றும் நிதியமைச்சின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.


# தேர்தல் கடமையிலீடுபடும் கிராமசேவகர்களுக்கு கொடுப்பனவு 10 வீதத்தால் அதிகரிப்பு

சனாதிபதித் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் கிராமசேவையாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை 10 விழுக்காடு அதிகரிப்பதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் ஆற்றும் கடமைகளுக்கமைய அவர்களுக்கு இந்த அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது. தேர்தல் காலங்களில் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றுவது உட்பட அவர்கள் பல்வேறு சேவைகளை ஆற்றுவதனால் இந்த கொடுப்பனவு அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. கடந்த பொதுத் தேர்தல் காலங்களில் கிராமசேவையாளர்கள் பெற்ற கொடுப்பனவுகளை விட அதிகமான கொடுப்பனவு இம்முறை வழங்கப்படும்.

# போலி அஞ்சல் முத்திரை பொலிசார் எச்சரிக்கை

போலியான அஞ்சல் முத்திரைகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸ் மா அதிபர் எச்சரித்துள்ளார்.1000 ரூபா 500 ரூபா 100 ரூபா 20 ரூபா மற்றும் 10 ரூபா பெறுமதியான முத்திரைகளே இவ்வாறாக போலியாக வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தெஹிவளை மற்றும் கொழும்பில் உள்ள பிரதேச செயலகங்களில் இது தொடர்பான விசாரணைகளை பொலிசார் நடத்தியுள்ளனர்.இதன்போது பல முக்கிய ஆவணங்களுக்காக குறித்த அஞ்சல் முத்திரைகள் பயன்படுத்தப் பட்டமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# லேப்ராஸ்கோபிக் அறுவைச்சிகிச்சை




பெருங்குடல் புற்றுநோய்க்கு சாதாரண அறுவைச் சிகிச்சை போல லேப்ராஸ்கோபிக் அறுவைச் சிகிச்சையும் பயனுள்ளதே. இவற்றில் லேப்ராஸ்கோபிக் சிகிச்சைக்கு நீண்ட நேரம் பிடித்தாலும் அதைச் செய்து கொண்டவர்கள் வெகு சீக்கிரமாக குணமடைந்து விடுகிறார்கள். அதுபோல வலியும் கணிசமாகக் குறைந்து விடும்.

பெருங்குடல் புற்றுநோய்க்கு 1991 முதல் லேப்ராஸ்கோபிக் ரெக்னிக்கை பயன் படுத்தி வருகிறார்கள். இந்த முறையில் சிகிச்சை செய்யும்போது ஒரு சிறிய காமிரா மற்றும் அறுவை சிகிச்சைக்கான கருவிகளை சிறிய கத்தி போன்ற கருவி வழியாக உடம்பினுள் செலுத்தி புற்றுநோய்க் கட்டிகளை அடையாளம் கண்டு அகற்றுவார்கள். இத்தகைய சிகிச்சையின் போது உடம்பில் பெரிய அளவில் கீற வேண்டி இருக்காது. மிகச்சிறிய துவாரம் மட்டுமே போடுகிறார்கள். இந்த சிகிச்சையை முடிப்பதற்கு நீண்ட நேரம் பிடிக்கும். இருந்தாலும் வழக்கமான முறையில் அறுவைச் சிகிச்சை செய்வதைக் காட்டிலும் லேப்ராஸ்கோபிக் சிகிச்சை செய்து கொள்பவர்களின் ஆயுட் காலம் நீடிக்கிறது. அது தவிர அவர்கள் குறுகிய காலத்தில் பெருமளவுக்கு உடல் தேறி விடுகி றார்கள். இருப்பினும் வழக்கமான பாண' அறுவைச் சிகிச்சைக்கு ஆகும செலவைக் காட்டிலும் லேப்ராஸ் கோபிக் சிகிச்சைக்கு கூடுதல் செலவு பிடிக்கும் கூடுதல் செலவுக்கு நவீன தொழில் நுட்பம், மருத்துவ அலுவலர்களுக்கு பயிற்சிப் போட்டி ஆகியவையே காரணம்ஆகும்

# புதிய வகை கடல் வாழ் புழு கண்டுபிடிப்பு



சுவீடனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இருவர் அந்நாட்டு கடற்கரைகளில் புதுவிதமான புழுவகையைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஸோம்பை எனப்படும் இவ்வகைப் புழுவகைகள் முன்னர் பசுபிக் சமுத்திரத்தின் ஆழத்தில் காணப்பட்டவையாகும். எனினும் அவை தற்போது வட கடலில் காணப்படுவது வியப்பையளித்துள்ளது. விஞ்ஞான ரீதியாக அவை "ஒஸ்டக்ஸ் மக்கோப்ளோறிஸ" என்ற வகையைச் சேர்ந்தவை என்றும் அவை இறந்த திமிங்கலங்களின் எலும்பை சாப்பிட்டு உயிர் வாழ்வன என்று இவை கடற்பூக்கள் போன்ற வடிவத்தில் காணப்படுவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.இவை எலும்புகளை நுகர்வதாகக் கூறப்படுவதற்கான காரணம் இவற்றின் வேர்கள் திமிங்கல எலும்புக்களோடு இணைக்கப்பட்டிருப்பதாகும் என கூறப்படுகிறது.

இவ்விஞ்ஞானிகள் திமிங்கலங்கள் வீழ்ச்சியுறுவது பற்றி ஆய்வு நடத்திய வேளை ஒரு திமிங்கல எலும்பைக்கண்டதாகவும் அதன் போது மேற்கூறப்பட்ட புழுவகையைக் கண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.இந்த திமிங்கலத்தின் எலும்புக் கூட்டை கண்டுபிடித்த விஞ்ஞானிகள் சுவடனைச் சேர்ந்த அட்ரியன் க்ளவர் மற்றும தோமஸ் டாக்ரம் என்பவர்களாவர். இவர்கள் 2004 ஆம் ஆண்டு மேற்படி எலும்புக் கூட்டைக்கண்டுள்ளனர். தற்போது இவற்றை ஒட்டியுண்ணும் மேற்படி புழுக்களின் நீளம் ஒன்று முதல் இரண்டு சென்ரி மீற்றர்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது. ஒரு பூவினது அமைப்பைக் கொண்ட இந்த புழு நீரிலிருந்து பிராணவாயுவைப் பெற்றுக் கொள்ள ஏற்றவாறு குஞ்சம் போன்ற பொருள் காணப்படுகிறது.

# செயற்கை மழை





செயற்கை மழை பெய்விக்கும்போது இரண்டு நாட்களுக்கு மேல் அரும்பாடுபட்டு ரொக்கெட்டுகள், விமானங்கள், பீரங்கிகள் ஆகியவற்றின் மூலமாக மழையைக் கருத்தரிக் கும்படி மேகங்களைத் தூண்டு கின்றனர். அதாவது உப்பு, சில்வர் அயடீன் போன்ற ஐஸ் உருவாக்கும் பொருட்களை ஆகாயத்தில் தெளிக்கின்றனர். இதனால் உருவாகும் மேகங்கள் மழையைப் பொழிகின்றன.

மழையையும் செயற்கை மழையையும் வித்தியாசப்படுத்த முடியாது. ஆனால் செயற்கை மழையில் விழும் மழைத் துளி பெரியதாக இருக்கும் ன்று நம்பப்படுகின்றது. செயற்கை மழை ஆரோக்கியமானதா? நாம் உண்ணும் உணவுக்கு சுவை கூட்டுவதற்காகப் போடப்படும் அயடீன் கலநத உப்பு ஆரோக்கியமானது தானே. செயறகை மழையில் உள்ள அயடீன் உப்பில் உள்ள அயடீனை விடக் குறைவான அளவுதான். ஆகையால் செயற்கை மழையால் உடல் நலனுக்கு ஆபத்து இல்லை.

செயற்கை மழை எங்கெல்லாம் பெய்கின்றது? உலகெங்கும் 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் வானிலையைத் திருத்தி செயற்கை மழையை வரவழைக்க முயன்று கொண்டிருந்தாலும் சீனாவில் தான் பெரிய அளவில் செயற்கை மழை பெய்விக்கப்படுகின்றது.

# மனித மூளைக்கும் கணினிக்கும் மிடையில் தொடர்பை ஏற்படுத்த முயற்சி




மனித மூளைக்குள் கொம்பியூட்டர் சிப்ஸ்களை இணைத்து மூளைக்கும் கம்பியூட்டருக்கு இடையே செயல் மற்றும் தகவல் தொடர்பு ஏற்படுத்த புதிய ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அமெரிக்காவின் மசாச்சுசெட்ஸ் நிறுவனம் இதற்காக அனுமதியை உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பிடம் பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து மனித மூளை பாதித்த அல்லது குறையுள்ள குழந்தைகளின் மண்டை ஓட்டுக்குள் நான்கு சதுர மி.மீற்றர் அளவுள்ள சிப்ஸ் பொருத்தப்பட்டு ஆராய்ச்சி மேற் கொள்ளப்படுகிறது. கொம்பியூட்டர் உதவியுடன் மனித மூளைச் செயற்பாட்டை எப்படியெல்லாம் அதிகரிக்க முடியும் என்பதற்கான ஆராய்ச்சி இது.


# கிராமத்து விஞ்ஞானி



ஜன்ஸ்டீன் போல தொங்குமீசை அப்துல் கலாம் போல தோளைத் தோடும் நீண்ட தலைமுடி. இப்படித் தானே ஒரு விஞ்ஞானி இருக்க வேண்டும். ஆனால் இந்த விஞ்ஞானி வித்தியாசமானவர். அதாவது சாதாரண மக்களைப் போல மக்களோடு மக்களாக நடமாடும் ஒரு விவசாயி. பிஜீங் நகருக்கு தென் கிழக்கே சுமார் 70 கி.மீ தொலைவில் உள்ள மாவு கிராமத்தில் வசிக்கும் 43 வயது விவசாயி வூ யு லூ தான் அந்த வித்தியாசமான விஞ்ஞானி. இவர் இதுவரை 15 இயந்திர குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கின்றார். அதாவது ரோபோ எனப்படும் 15 இயந்திர மனிதர்களை உருவாக் கியிருக்கிறார். இவர் தனது இயந்திர மனி தனுக்கு வூலோதா என்று பெயரிட்டார். சீன மொழியில் லோ தா என்றால் தலைச்சன் குழந்தை என்று பொருள. தொடர்ந்து கண்டுபித்த இயந்திரக் குழந்தைகளுக்கு வூ லோ ஆர், வூ லோ சன் என்று எண்ணிக்கையின் அடிப் படையில் பெயரிட்டார். சீன மொழியில் அர் என்றால் இரண்டு. சன் என்றால் மூன்று கடைசியாக இவர் உருவாக்கிய 15ஆவது இயந்திரக் குழுந்தையின் பெயர் வூ சி வு இவருடைய பண்ணை வீட்டிற்குப் போனால் ஒரு இயந்திரக் குரங்கு சுவர் ஏறிக்குதிக்கின்றது. ஒரு இயந்திர மனிதர் வீட்டைச் சுற்றி நடந்து வருகின்றார். அவர் நடப்பது மட்டுமல்ல குதிக்கிறார். மின் விளக்கு பல்ப் தீய்ந்து போனால் வேறு பல்ப் மாற்றுகின்றார். சிகரெட் பற்றவைக்க நீங்கள் தீப்பெட்டி தேடினால் உடனே சிகரெட் பற்ற வைத்துத் தருகின்றார் விருந்தினர்களுக்குத் தேநீர் ஊற்றிப் பரிமாறுகிறார் இன்னொரு இயந்திரம் இருக்கின்றது. எட்டுக் கால்களை உடைய ஒரு மரவாகனம் அதில் நீங்கள் ஏறினால் ஒரு சிலந்தி போல சவாரி செய்யலாம் இவ்வளவு அற்புதமான கண்டுபிடிப்புக்களை செய்திருக்கும் வூ யு லூ என்ன படித்திருக்கின்றார்.

ஐந்தாம் வகுப்பு வரை படித்திருக்கின்றார். படிப்பதற்கு எனக்கும் பிடிக்கவில்லை. நான் பள்ளிக்குப போக விரும்பவில்லை. என் தந்தை பிரம்பால் விளாசித் தள்ளினார். அப்படியும் நான் பள்ளிக்'குப் போகவில்லை என்கிறார். ஆனால் பல குழந்தைகளைப் போல பொம்மையோடு விளையாடுவது இவருக்கு குழந்தைப் பருவத்தில் பிரியமானதாக இருந்தது. 'விளையாட்டை விட்டால் கிராமத்துக் குழந்தைகளுக்கு ஒரே பொழுதுபோக்கு கஷ்டமான வயல் வேலைதான். வூ யு லூ தமது பொழுது போக்கான பொம்மை விளையாட்டில் இருந்து தமது கற்பனைத் திறனை வளர்த்துக் கொண்டார்.

இவர் முதன் முதலில் கண்டு பிடித்தது ஒரு சிறு இயந்திரம் எலாஸ்ட்டிக் நூல் கட்டிய ஒரு வட்டுடன் மரத்தின் விழுதுகளை இணைத்து இந்த இயந்திரத்தை தயாரித்த போது இவருடைய வயது ஆறு. அந்த இயந்திரத்தை முடுக்கிவிட்டால் அது எலாஸ்டிக் நூலின் சக்தியால் வட்ட வட்டமாகச் சுற்றிவரும். முதுகெலும்பை ஒடிக்கும். கடினமான வயல் வேலை வூ யு லூவின் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டது. வயல் வேலையைச் செய்வதற்காக ஒரு இயந்திரத்தை ஏன் உருவாக்கக் கூடாது என்று நினைத்தார்.



மெர்க்குரி எனப்படும் புதன் கோளை நோக்கி மெஸஞ்சர் எனும் விண்கலத்தை அமெரிக்கா அனுப்பியுள்ளது. புதன் கோளை நோக்கி கடந்த 30 ஆண்டுகளில் முதன் முறையாக விண்கலத்தை அமெரிக்காவின் நாஸா நிறுவனம் ஏவியுள்ளது.

## கையடக்கத் தொலை பேசியில் தொலைக்காட்சித் தொடர்

சிங்கப்பூரில் உள்ள ஒரு தொலைக்காட்சி நிலையம் கையடக்கத் தொலை பேசியில் தொலைக் காட்சித் தொடர் ஒன்றை ஒளிபரப்ப இருக்கின்றது. ஆசியாவிலேயே இது முதல் முறையாகும். 30 வாரம் சீன மொழியில் இந்தத் தொடர் ஒளிபரப்பாகும். இந்த மாதக் கடைசியில் இருந்து இந்தத் தொடர் தினமும் மூன்று நிமிடம் மட்டும் ஒளிபரப்பாகும். அடுத்த ஆண்டு முதல் 90 நிமிட நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்.

**உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு**
**வடக்கு கிழக்கு மாகாண சபை**
**வடக்கு~கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)**
**நிதி ~ஆசிய அபிவிருத்தி வங்கி**
**"ஆ.அ.வ" கடன் இல.2084 - சிறீ (எஸ்.எவ்)**

# கேள்வி அறிவித்தல் இல: 57

01 வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (NECORD-Ext) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் , கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னால் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD திட்டக்கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள்கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| ஒப்பந்த இனங்காட்டல் இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்வி பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| NEP/NECORD-Ext/AG/01 | வவுனியா, விவசாய போதனாசாலையில் விரிவுரை மண்டபம், அலுவலர் விடுதி அமைத்தல் மற்றும் அலுவலகம் புனர்நிர்மாணித்தல் | M4 கட்டடங்கள் | 255,900/= |
| VA/NECORD-Ext/ID/01 | வவுனியாவில் கலாசார மண்டபம் அமைத்தல் | M4 கட்டடங்கள் | 305,000/= |
| NEP/NECORD-Ext/ID/01&02 | திருகோணமலை, வரோதயநகரில் இரண்டு, மூன்று மாடி அலுவலர் விடுதி அமைத்தல். | M4 கட்டடங்கள் | 307,000/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்விகோருவதற்கு தகுதியுடையவராவர்

I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு தரவுப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராக பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD உடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படல்வேண்டும் இக்காலத்தின் போது. மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV) (ICTAD) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்த ஆற்றல் அளவைக்கொண்டிருக்கவேண்டும்

V) ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI) கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

04 ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் (NECORD) வேலையடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்விதொடர்பான மேலதிகத் தகவல்களை 55, கந்தசுவாமிகோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 026 -222 7434, தொலைநகல்:- 026- 222 7401, மின்னஞ்சல்:- www.necord.org ஈமெயில necord @ sltnet.lk

06 கேள்வி ஆவணங்களை 21.10.2005 ஆம் திகதியிலிருந்து 07.11.2005 ஆம் திகதிவரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 2000/=ஐச் செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம்.

07 இருபொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம்,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

08 பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர்,திட்ட கேள்விச்சபை "நீகோட்" 55 கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு 14.11.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்கவேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09 முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 07.11.2005 ஆந்திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

த.லங்காநேசன்,
தலைவர், கேள்விச் சபை,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம்,
55, கந்தசுவாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(சி-1304)

# மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாணசபை
# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம்(நீகோட்)
# ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.

# வெற்றிடங்கள்

திருகோணமலை வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட முகாமைத்துவ காரியாலயத்திலும், மாவட்ட காரியாலயங்களிலும் கீழ்காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பொது நிபந்தனைகள்:-

நியமனங்கள் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அவ்வொப்பந்தம் திருப்தியடிப்படையில் மேலும் நீடிக்கப்படுவர்.

## வயதெல்லை:-

நேர்முகப் பரீட்சையின் போது 55 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டும் 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படும்.

## விண்ணப்பிக்கும் முறை:-

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுயதரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் 2005.11.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம் (NECORD) 55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற முகவரியில் கிடைக்கவேண்டும். அரச திணைக்களம் / அரச கூட்டுத்தாபனங்கள் / சபைகள் என்பவற்றில் சேவையில் இருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

## தெரிவு செய்யப்படும் முறை

தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பிரதித்திட்டப்பணிப்பாளர்–01 பதவி திட்ட முகாமைத்துவ காரியாலயம் திருகோணமலை.

## கடமைகளும் பொறுப்புகளும்

விசேடமாக இதற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப்பணிப்பாளருக்கு உதவவேண்டும்.

- திட்ட முகாமைத்துவப் பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல் அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல் நிறைவேற்று மதிப்பீடு என்பவற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.
- திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளைத் திறமையாக ஏற்பாடு செய்தல். மற்றும் விருத்தி செய்தல், திட்ட நடவடிக்கைகளின் செயற்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- நடைமுறைப்படுத்தலின் போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.
- திட்ட நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதி முகவர் ரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்தி பேணி வரவேண்டும்.
- திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின்படி வழங்கல் ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கவேண்டும்.

## தேவையான தகைமையும் அனுபவமும்.

பொறியியல், விஞ்ஞானம், சட்டம், பொருளியல், வர்த்தகம், விவசாயம், வியாபார நிர்வாகம், முகாமைத்துவம், கணக்கியல் அல்லது வேறு ஏதாவது துறையில் பட்டமொன்றுடன் வெளிநாட்டு நிதி நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரேஷ்ட முகாமைத்துவத்தரத்தில் 08 வருடங்களுடன் 12 வருட அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

அல்லது

குறிப்பிட்டதுறையில் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு தகைமை (கலைமாணி/டிப்ளோமா)அல்லது குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் கூட்டு அங்கத்துவத்துடன் வெளிநாட்டு நிதி முகவரகங்களில் நிதியிடப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் 05 வருடங்கள் உட்பட 8 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

## தொழில் சார் திறமைகள்

- சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான திறமை.
- திட்டத்தின் நீண்டகால நீடித்த தன்மையை உறுதி செய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.
- பலதரப்பட்ட ஒழுக்காற்று குழுக்களின் வேலைகளைத் திறமையாக ஏற்பாடு செய்துமுன்னெடுத்துச் செல்லும் திறமை.
- திட்ட நடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.
- திறமையான தொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல்வேண்டும்.
- அரசாங்க நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவாரயிருத்தல்வேண்டும்.
- கணனி அறிவு பெற்றிருத்தல்
- ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்கும் உயர் மட்டத்தேர்ச்சி இருத்தல்.

## சம்பளம்

2000.12.26 ஆம் திகதிய இல 10 முகாமைத்துவ சுற்று நிருபத்தின் பிரமாணம் 5.1. இற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளப் படி ஒன்று வழங்கப்படும்.

பொறியியலாளர் ( 01 பதவி – முல்லைத்தீவு காரியாலயம்)

## கடமைகளும் பொறுப்புகளும்

- திட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதலும் மாவட்ட பிரதி திட்டப்பணிப்பாளருக்கு அறிவுரை கூறுதலும்.
- திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு கிடைக்கபெறும் திட்ட அறிக்கைகளை பகுப்பாய்வு செய்வதற்கான தகுதி.
- திட்டங்களைதிறமையாக செயல்படுத்துவதிலும் கண்காணித்தலிலும் உள்ள ஆற்றல்களும் வேலைகளையும், சேவைகளையும், வழங்கல்களையும் பெற்றுக்கொள்ளுவது சம்பந்தமான அடிப்படை அறிவு.
- செயற்படுத்ததில் ஏற்படும் பிரச்சினைகளை பகுப்பாயும் திறமை.

## தேவையான தகைமை

இலங்கை பொறியியலாளர் சேவை II/I

## சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுவபவத்திற்கும் அமைவாக 2000.12.26 ஆம் திகதிய இல 10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5இற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

**த.லங்காநேசன்,**
**திட்டப்பணிப்பாளர், நீக்கோட் திட்ட காரியாலயம்,**
**55, கந்தசாமி கோவில் வீதி,**
**திருகோணமலை.**

(சி-13045)

## INVITATION TO BID
### Extension of Bidding time
### Health Infrastructure Development Program funded by World Vision Lanka for the Ministry of Health of the Democratic Socialist Republic of Sri Lanka :
### Construction of Gramodaya Health Centers:

1. Memorandum of Understanding between the Government of Sri Lanka and the World Vision Lanka has been signed to rehabilitate the Health Infrastructure in the areas affected by Tsunami on 26th December 2004 The United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility is providing technical services as implementation partner of the Ministry of Health and World Vision Lanka.

2. The United Nations Office for Project Services – Sri Lanka Project Implementation Facility therein after referred to as "UNOPS", invites sealed bids from eligible bidders **with ICTAD Grading M6 and above for the Construction of Gramodaya Health Centers at locations given below**:

| District | Location | Bid Bond | Bid Document Issues & Collection |
|---|---|---|---|
| Lot 1 Mullaitivu | 1.Kompaveli<br>2.Palinagar<br>3.Therangandal | 50,000/-<br>50,000/-<br>50,000/- | UNOPS<br>230, Thirunagar South,<br>Kilinochchi<br>Tel:021 2285729 |

5. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of non-refundable fee of **Rs 3,000.00.** Bidding documents will be issued to eligible bidders 9.30 am to 5.00 pm on working days **Until The 25th October 2005 to** at the relevant area offices indicated above and at UNOPS-SLPIF in Colombo at 17 Park Avenue, Colombo5. **Contractors with ICTAD Grading M4 and above may submit complete Bids (Lot 1) or partial bids per Lot, provided full BOQs are submitted for each location. Contractors with Grading M5 and below can ONLY submit partial bids per Lot – i.e. individual projects only and will not be considered for packages (Lots).**

6. All bids must be accompanied by a Bid Security in the prescribed format and must be delivered to UNOPS at the relevant Area Offices indicated above before 2.00 pm on 24th October 2005. Bids will be opened immediately thereafter in the presence of bidders or their authorized representatives who choose to attend.

7. UNOPS will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation of delivery of bids.

Country Coordinator
UNOPS- SLPIF

(சி-13088)

## கண்டாவளைகோட்ட பாடசாலைகளில் 2005 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு

(கண்டாவளை)

கண்டாவளை கோட்ட பாடசாலைகளில் 2005 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பரீட்சைப்பெறுபேறுகள் வருமாறு:-கிளி/தருமபுரம் இல.01அ.த.க.பாடசாலை சூ.கோபிகிருஸ்ணா-150புள்ளிகள் அ.சனோஜினி -148புள்ளிகள், கிளி/முரசுமோட்டை முருகானந்தா ம.வித்தியாலயம் வி.டினுசியன் 145 புள்ளிகள்,கிளி/தருமபுரம் ம.வித்தியாலயம் ரியென்சியா-149புள்ளிகள், ருசான்132புள்ளிகள், சுகன்யா-133புள்ளிகள். (14)

## ராஜன் சைக்கிள் வேக்ஸ் (மகாலக்சுமி)
பஸ்நிலையம் பருத்தித்துறை

**அன்பர்கள், நண்பர்கள், வாழக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.**

### யாழ் – கொழும்பு பயணிகளுக்கான முக்கிய அறிவித்தல்

### யாழ். - கொழும்பு

குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் பயண ரிக்கட்டுகள் எம்மிடம் பதிவு செய்து கொள்ளலாம். உள்ளூர் விமான ரிக் கட்டுகள் எம்மிடம் பதிவு செய்து கொள்ளலாம். வாடகைக்கு வான் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

எமது நிறுவனத்தின் பெயரைச்சொல்லி சில வான் உரிமையாளர்கள் பயணிகளை ஏற்றி சில அசௌகரியங்கள் ஏற்பட்டு சிலர் உடைமைகளையும் இழந்துள்ளனர். இவர்கள் பின்பு எம்முடன் தொடர்பு கொண்டபோதுதான் இது எமக்குத்தெரியவந்தது. எனவே தயவு செய்து பயணிகள் எம்முடன் நேரடியாக அல்லது எமது தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.எமது நிறுவனத்தில் பதிவு செய்யும் பயணிகளின் பயணத்திற்கு விசேட சலுகைகள் அளிக்கின்றோம்.

**கொழும்பில் இருந்து பருத்தித்துறை –யாழ்.வருபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்**
**0112 521212, 0777 268024.**

**பருத்தித்துறை–யாழ் இல் இருந்து கொழும்புக்கு செல்பவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்**
**02122 63248 , 0212263607.**

**வீடு – 021–2264013**

**எமது வாழக்கையாளர்களுக்கு றலி, டுமாலா சைக்கிள்கள், ரி.வி.டெக் ஏனைய பொருள்களும் பெற்றுக்கொள்ள லாம்.காஸ் குக்கர் எடுப்பவர்களுக்கு காஸ் சிலிண்டர் இலவசம்.**

(சி.13091)

# United Nations Development Programme

Post ofd Operations/ In formation Management Assistant to be based in Jaffna.

## UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME

position of Operations/ Information Management Assistant (OPS/IMA),JAFFNA.

The duties and responsi bilities of the OPS/IM Assistant, Jaffna are as Follows.

The OPS/IM Assistant will be responsible to the jaffna operations Officer. Specificduties will be:

- Assist in maintaining the central filing system for IMSMA especially Task Dossier related documentation:
- Alter status for all objects in IMSMA;
- Assist in the maintenance of the IMSMA data related mine and UXO incidents and accidents including cross-checking with Government departments, UNICEF, ICRC and other related sources,
- Informing the Operations Officer on inaccuracies of incoming reports;
- Liaise with Mine Action, NGO s on IMSMA reports;
- Assist in updating the clearance progress reports by every week.
- Assisting in the maintenance of archived information in IMSMA Archives;
- Completing additional tasks assigned by the mine Action Officer.
- Other duties as required by either the mine Action Officer, Operations officer or the Technical Advisor.

Educational Background:

- University degree in a computer related subject or G.C.e.(Adv.Level) with 5 years experience in the relevant field.

**Experience:**

- Experience with database use and /or information Management Systems;
- Excellent computer skills in the Windows 2000 and xp Professional environment with the ability to transfer written text into electronic text;
- Experience in operational issuse for Mine Action preferred ;
- Very good ability in topographical map reading;
- Accuracy of work and meeting deadlines; **Others:**
- Fluent in both written and spoken Tamil and English.Knowledge in sinhala language is an advantage.
- willing to travel for training if required;
- Possess good work habits with a willingness to work in a multi-cultural environment;
- Flexible and adaptable to any situation;
- Be in good health.

**Duration:** Initially for one year with probable extensions;

**Duty Station**: jaffna

non-related referees and a contact telephone number during working hours. on or brfore 4pm on the 26 th October 2005. The positionoffers an attractive

N.B Only short-listed candidates will be notified.

(சி-13076)

# IMMEDIATE VACANCY

**Solidar**
AN INGO consortium including
NPA,SAH and ASB

**Position: Field Monitors (4 Positions)**

Solidar is a consortium of organizations of 12 European Countries that supports a broad portfolio of projects.The Solidar network in Srilanka comprises of three international NGO s-Arbeiter Samariter Bund (ASB),NOrwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, Solidar will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami Affected families in Vadamarachchi East.

TheField Monitors will follow up the daily progress of constuction on site.He/She will be responsible for assuring quality control of the construction works carried out by the subcontractors and prepare daily reports to the technical officer.

Interested candidates MUST posses the minimum requirements stated below. please send in your applications to reach us on or before 27 thOctober 2005.

**Qualifications:**

- A civil engineering/ architecture degree with a minimum of one year construction experience.
- Or a NDT or NCT with minimum 2 years construction supervision experience
- Or a background in construction supervision with minimum 6 years experience.
- Knowledge in English language is essential.
- Should be computer literate (Microsoft Word and Excel)

**Solidar, No.156 jaffna Road,Paranthan**

(சி-13050)

Norwegian People's Aid ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. Swiss Labour Assistance SAH



**INVITATION TO BID**

**Extension of Bidding Time**
**School Buildings and Infrastructure Reconstruction Programme**
**Funded by UNICEF**
**for the Ministry of Education of the**
**Democratic Socialist Republic of Sri Lanka:**

**CONSTRUCTION OF TWO SCHOOLS:**
**LOT 1: SILLAWATHI HBTMS SCHOOL AT MULLAITIVU**

**(Project No SL01P1-0301/ Contract No SL01C1-0301)**
**LOT 2: VALAYANMADAM GTMS AT MULLAITIVU**
**(Project No SL01P1-0302/ Contract No SL01C1-0302)**

1. A Memorandum of Understanding between the Government of Sri Lanka and UNICEF has been signed to rehabilitate the School Infrastructure in the areas affected by the Tsunami on 26th December 2004. UNICEF has consented to provide assistance to the Ministry of Education of GOSL for the reconstruction of schools damaged by the Tsunami. The implementation partner of UNICEF is the United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility.

2. The United Nations Office for Project Services-Sri Lanka Project Implementation Facility, herein after referred as "UNOPS", invites sealed bids from the eligible bidders for the school building given below:

| Contract No. | Project No. | Project Name |
|---|---|---|
| SL01C1-0301 | SL01P1-0301 | Sillawathai HBTMS, Mullaitivu |
| SL01C1-0302 | SL01P1-0302 | Valayanmadam GTMS, Mullivaikkal, Mullaitivu |

3. All bidders shall have the following qualifications irrespective of whether they apply independently or as a joint venture with an eligible bidder:
   (a) Registration in the field of Building Construction in grade **M3 or above,** at the Institute for Construction Training & Development (ICTAD), and
   (b) Member of the National Construction Association of Sri Lanka (NCASL).

4 Additional information and Bidding Documents will be available at the office of the Chief Technical Advisor of UNOPS at No 17, Park Avenue, Colombo 5. A non-refundable fee ofRs 10,000 is required at the time of collection of Bid documents of each School.

5. Bidding documents will be issued following receipt of written applications from eligible bidders until the 25th Oct 2005.

6. This Invitation to Bid shall close at 2 pm on **28th Oct 2005** at UNOPS office, 17 Park Avenue, Colombo-5..All bids must be addressed to **The Country Coordinator of UNOPS Sri Lanka Project Implementation Facility** and accompanied by a Bid Security in the prescribed format.

7. UNOPS Sri Lanka Project Implementation Facility will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation or delivery of bids.

Country Coordinator
UNOPS Sri Lanka Project Implementation Facility (சி-13086)


# வரும் சட்ட மன்றத் தேர்தலில் 234தொகுதிகளில் பா.ஜ.போட்டி

(மதுரை)

சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடுவோம் என்று சி.பி.ராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மதுரையில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்த அவர், சட்டமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளோம். அந்த முடிவில் உறுதியாக உள்ளோம். நடிகர் விஜயகாந்த் கட்சியுடன் கூட்டுச் சேரவாய்ப்பில்லை. ஏனென்றால்அவரும் எல்லா தொகுதிகளிலும் போட்டியிடுவோம் என்று தெரிவித்துள்ளார். தமிழகத்தில் பயிர்க்கடன் கிடைக்காமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர். தேசிய உடமையாக்கப்பட்ட வங்கியாக இருந்தாலும் கூட்டுறவு வங்கிகளாக இருந்தாலும் விவசாயிகளுக்கு உடனே கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத்தெரிவித்தார்.



இந்தியாவின் உள்நாட்டுப்பாதுகாப்பு இராணுவ செயல்பாடுகள் பற்றியவிவாதம் நேற்றுமுன்தினம் டில்லியில் நடைபெற்றபின் முப்படை தளபதிகளுடன் பிரதமர் மன் மோகன்சிங்.


# பொன்விழா அழைப்பிதழ்

1955 ஆம் ஆண்டு செல்வி.
மியூறியல் வையலற் ஹட்சின்ஸ்
அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட
இருள்நீக்கி ஒளிபரப்பும் கருணா
நிலையத்தின் பொன்விழாக்காண
அனைத்து உள்ளங்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்:-23.10.2005
இடம் :-கருணா நிலையம்,
A9 பிரதான வீதி,
கிளிநொச்சி.

தகவல்:-
(6864) கருணாநிலையக் குடும்பம்



# சாவு அறிவித்தல்



**திரு. சபாபதி கந்தசாமி**

(இளைப்பாறிய உப தபாலதிபர் மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்தைப்பிறப்பிடமாகவும் கனகபுரம் மூன்றாம் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட சபாபதி கந்தசாமி 20.10.2005 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சபாபதி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், பராசக்தியின் அன்புக்கணவரும், சபாரஞ்சன், (ரஞ்சன் மாஸ்ரர் போராளி) சக்திதரன்(ஆசிரியர் முறிகண்டி அ.த.க.பாடசாலை) சக்திகலா ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி சபாரஞ்சனின் (ஆசிரியர் கனகபுரம் ம.வி.) அன்பு மாமனாரும், எழிலோனின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 20.10.2005 அன்று பிற்பகல் 4.30மணிக்கு கனகபுரத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இல.35
கனகபுரம்,
கிளிநொச்சி.

(6371)

தகவல்:-
குடும்பத்தினர்.

# இந்தியாவுடனான ஒருநாள் தொடர் அணியின் திறமையைக் கணிப்பிட உதவும்!

## -சிறிலங்கா அணித்தலைவர். மார்வன் அத்தப்பத்து



நடைபெறவுள்ள இந்தியாவுடனான கிரிக்கெட்போட்டிகள் தமது அணி வெளிநாடுகளில் எவ்வாறான திறமையை வெளிப்படுத்தும் என்பதை கணிப்பிடக்கூடியதாக இருக்கும் என சிறிலங்கா கிரிக்கெட் அணித் தலைவர் மார்வன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

மும்பையில் நேற்று முன்தினம் இத் தொடர்பற்றி ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது, மிக நீண்டநாட்களாக வெளிநாடொன்றில் பலப்பரீட்சையில் ஈடுபடவில்லை என்றும், அதிலும் ஏழு ஒருநாள் போட்டிகள் கொண்ட நீண்ட தொடரில் கலந்து கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுடனான போட்டிகளில் அதன் மண்ணில்வெற்றி கொள்வது பெரும் சவால் எனக் குறிப்பிட்ட அத்தப்பத்து முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக் கூறினார்.


அண்மையில் தனது மண்ணில் இந்திய அணியை வெற்றிகொண்டதைக் குறிப்பிட்ட அவர் அதன் மண்ணில் வீழ்த்துவதென்பது கடினமானதாகும் என்றார். சிறந்த சர்வதேசஒரு நாள்போட்டி அணித்தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட அத்தப்பத்து மேலும் குறிப்பிடும் போது, சுமார் நீண்டஇடைவெளியின் பின் இந்தியாவுக்கு வருகைதந்துள்ள தமது நாட்டு அணி ஒருடெஸ்ட்போட்டியிலும் அதன் மண்ணில் வெல்லவில்லை என்றும் இந்தத் தொடரை எவ்வாறேனும் வெல்லும்நோக்கில் வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வருகைதந்துள்ள சிறிலங்கா அணி இன்று மும்பை கிரிக்கெட் சபைத்தலைவர் 11 பேர் அணியுடன் ஒருநாள் பயிற்சிப்போட்டியில் பங்கேற்கின்றது. 11 பேர் அணிக்கு நிலேஷ் குல்கர்னி தலைமை வகிக்கிறார். இவர் இடதுகை சுழல்பந்துவீச்சாளராவார்.

குல்கர்னி 1997 ஆம்ஆண்டு பிரேமதாஸ மைதானத்தில்நடைபெற்ற இந்தியாவுடனான டெஸ்ட்போட்டியின் முதல் இன்னிங்சில் அத்தப்பத்துவை தனது முதலாவது பந்தில் வெளியேற்றியமையை நோக்கத்தக்கதுடன் அப்போட்டி சிறிலங்கா ஏழு விக்கட்இழப்புக்கு 952 ஓட்டங்களை பெற்றதும் தெரிந்ததே.

# அணி திறமையாக விளையாடும் பட்சத்தில் சிறிலங்காவுக்கு எதிரான தொடரைவெல்வோம்

## -இந்திய அணியின் தலைவர் ராவிட்



நாக்பூரில் நடைபெறும் சிறிலங்காவுடனான முதலாவது ஒருநாள் கிரிக்கெட்டில் பங்கு பற்றுவதற்காக நாக்பூர் வந்த இந்திய அணித்தலைவர் ராகுல்ராவிட் இந்திய அணி திறமையாக விளையாடுகிற பட்சத்தில் இலங்கைக்கு எதிரான தொடரை நிச்சயம் ஜெயிக்கமுடியும். டெண்டுல்கர் மீண்டும். இந்திய அணிக்கு வந்திருப்பது வலுச் சேர்ப்பதாகவுள்ளது. நான்தலைவர்பதவியை ஏற்ற பிறகு இலங்கையை எதிர்த்து இந்திய அணி விளையாட இருக்கிறது. இந்தச் சவாலை நான் எதிர்கொள்ள இருக்கிறேன் அந்தப்போட்டிகளை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளேன்.

நான் மீண்டும் இந்திய அணியின் தலைவராக தேர்வு செய்யப்பட்ட விஷயம் முழுக்க முழுக்க தேர்வுக் குழுவினர் எடுத்த முடிவு டெண்டுல்கருடன் சேர்ந்து விளையாடுவதற்கான வாய்ப்பு நீண்ட இடைவேளைக்கு பிறகுகிடைத்திருக்கிறது இதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன் என ராவிட் கூறினார்.

ராவிட் அவுஸ்திரேலியாவில் சூப்பர் கிரிக்கெட்டில் விளையாடிக் கொண்டிருந்தபோது அவருடைய மனைவி விஜிதா ஒக்ரோபர் 11ஆம் திகதி ஆண்குழந்தையொன்றை பெற்றெடுத்துள்ளார். ராவிட் நேற்று முன்தினம் மும்பையில் இருந்து பெங்களூர் வந்து மனைவியையும், குழந்தை யையும் பார்த்தார். அவர் இது குறித்து நிருபர்களிடம் பேசும்போது நான் ஒரு குழந்தைக்குக் தந்யைாகி இருப்பதை எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எந்தஒரு மனிதனும் தந்தையாவதில்லை தனி மகிழ்ச்சி இருக்கத்தான் செய்கிறது என்று குறிப்பிட்டார்.

# எதிர்பாராத மோதலினால் ஜெயசூரியவிற்கு உபாதை!

சிறிலங்கா கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சனத்ஜெயசூரிய அண்மையில் சிறிலங்கா அணியுடன் வோட்ட போலோ ஆட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் உடற் தகுதி பற்றி ஆராயும் வைத்தியருடன் எதிர்பாராத விதத்தில் ஏற்பட்ட மோதலினால் அவர் கடந்த செவ்வாயன்று கொழும்பில் நடைபெற்ற பயிற்சிப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது விட்டதாக கூறப்படுகின்றது.

அவரது இடது தோளில் மேற்படி வைத்தியர் திடீரென மோதிவிட்டார் எனினும் இந்தியாவுடனான போட்டியில் துடுப்பாட்டத்தில் மட்டும் பங்கேற்பார் என அறிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் நடை பெறாதிருக்குமானால் அவர் பந்து வீச்சிலும் ஈடுபட்டிருக்க முடிந்திருக்கும் என கூறப்படுகின்றது. ஜெயசூரிய கடந்த ஒகஸ்டில் கொழும்பில் நடைபெற்ற இந்தியாவுடனான முக்கோண இறுதிப்போட்டியின் போது களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தவேளை நிலத்தில் விழுந்து காயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# ஒலிம்பிக்கில் தங்கம்வென்றவர் போட்டியில் இருந்து நீக்கம்

(பீஜிங்)

கடந்த வருடம் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான ஆயிரம் மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தங்கப்பதக்கம் வென்ற ஷிங்குயினா என்ற சீன வீராங்கனை தற்போது சீனாவில் நடைபெறும் 10 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் 1500 மீற்றர் பந்தயத்தில் பங்கேற்றார்.அதன்போது200 மீற்றர் ஓடி முடிக்க வேண்டியநிலையில் அதுவரை இரண்டாவதாக ஓடிவந்த இன்னும் ஒரு வீராங்கனை முன்னேறிவந்து வெற்றியிலக்கை நெருங்கி விடமுயன்றபோது அவரை தனது முழங்கையினால் தடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அவரை தகுதியற்றவராகக் கருதி போட்டியிலிருந்து நீக்கினர். அதன்படி இரண்டாவதாக வந்த வியூக்விங் என்ற 19 வயது பெண் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார் இரண்டா வதாக 18 வயது குவாங்ஜீங்கும் மூன்றாவதாக ஷீசைனனும் வெற்றிபெற்றனர்.

## -யாழ்.உதைபந்தாட்டவீரர்களுக்கு-

# தொழில் நுட்பபயிற்சிகள் வழங்க ஜேர்மன் பயிற்றுவிப்பாளர்!

(வலிகாமம்)

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட வீரர்களுக்கு நவீன தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதற்கு ஜேர்மன் நாட்டிலிருந்து உதைபந்தாட்டப்பயிற்றுவிப்பாளர்கள் வருகை தரவுள்ளனர்.

யாழ்.மாவட்ட உதைபந்தாட்டத்துறையை மேம்படுத்துவதற்கென, யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டிலேயே இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகள் யாழ்.பொதுவிளையாட்டரங்கில் எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் 29 ஆம்திகதிவரையான நான்கு தினங்கள் நடைபெறவுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்ப்பாண உதைபந்தாட்டலீக்மேற் கொண்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (37)

# இந்தியப் போட்டிகள் அரச தொலைக்காட்சியில்

இந்திய கிரிக்கெட் அணி பங்குகொள்ளும் சர்வதேச போட்டிகள் அனைத்தும் அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யும் உரிமையை இந்திய அரசு அனுமதித்துள்ளது.

இந்த அறிவிப்பு இந்தியாவில் வாழும் ரசிகர்களுக்கு ஒருவிருந்தாகும். இதுவரை இவ்வாறான போட்டிகளை"ESPN" 'ஸ்டார் ஸ்போர்ட்ஸ்' தொலைக் காட்சிகள் மட்டுமே ஒளிபரப்பு செய்துவந்தன. இதன்படி இந்தியாவில் இந்தியா பங்குபற்றும் போட்டிகளும் வெளிநாட்டில் நடைபெறும் போட்டிகளும் ஒளிபரப்புச் செய்யப்படும்.

இந்த அறிவிப்பு ரசிகர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் அதேவேளை தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு பாரிய அடியாகும். இந்த அறிவித்தலின் படி 2007 உலகக்கிண்ணப்போட்டி, 2006 மினி உலகக் கிண்ணப்போட்டி ஆசிய கிண்ணம் என்பவற்றில் இந்திய ஆட்டங்கள் ஒளிபரப்படும் எனினும் இவை அரையிறுதிப் போட்டியிலிருந்தே ஒளிபரப்பப்படும்.

வரும் மாதங்களில் நடைபெறவுள்ள இந்தியா, சிறிலங்கா தென்னாபிரிக்க அணிகளுடன் பங்குபற்றும் போட்டிகளின் ஒளிபரப்புக்காக பிரசார் பாரதியிடம் ரூபா 900 மில்லியனுக்கு இந்திய கிரிக்கெட்சபை விற்றுள்ளது.

# 'லாரா' தனது நாட்டுஅணிக்காக சிறப்பாக விளையாடுவாரென நம்புகிறேன்!

## -மேற்கிந்தியஅணி பயிற்றுவிப்பாளர்



அண்மையில் அவுஸ்திரேலியாவுடனான சுப்பர் சீரிஸ் தொடரில் உலக 11 பேர் அணியில் பிரகாசிக்காத மேற்கிந்திய தீவுகளின் பிரையன் லாரா அவுஸ்திரலியாவில் நடைபெறவுள்ள போட்டிகளில் தனது நாட்டு அணி என்ற வகையில் சிறப்பாக ஆடுவார் என தான் நம்புவதாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி பயிற்றுநர் பெனட்சிங் தெரிவித்துள்ளார்.

லாரா இரு தொடரிலும் (டெஸ்ட் மற்றும் ஒருநாள்) மொத்தமாக 56 ஓட்டங் களையே பெற்றார். உலகஅணி என்ற வகையில்அவர் சிறப்பாக ஆடாவிட்டாலும் தமது அணி தமது வீரர்கள் என்றதைக் கருதி சிறப்பாக ஆடலாம் என சிங்தெரிவித்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று டெஸ்ட்ஆட்டங்களில் பங்கேற்க அவுஸ்திரேலியா சென்றுள்ளது.

# 15 ஆவது இடத்திற்குள் முன்னேறுவதே எனது அடுத்த இலட்சியமாகும்

## –இந்திய டெனிஸ் வீராங்கனை சானியாமிர்சா



உலக தரவரிசைப் பட்டியலின் 15 ஆவது இடத்திற்குள் வருவதே அடுத்த இலட்சியம் என இந்திய டெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்துள்ளார்.

ஜெய்ப்பூருக்கு விளம்பரப் படப்பிடிப்பில் கலந்து கொள்ளச் சென்ற போது பத்திரிகைக்கு அளித்த பேட்டியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இச் சந்திப்பில் உங்களுடைய எதிர்கால இலட்சியம் என்னவென்ற கேள்விக்கு பதிலளித்த சானியா,


நான் இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஒரு விடயத்தை உறுதியாகக் சொன்னேன். உலக தரவரிசை பட்டியலில் நான் எப்படியும் 50 ஆவது இடத்திற்குள் வந்துவிடுவேன் என்று. அதிர்ஷ்டத்தை நம்பி நான் அப்படி சொல்லவில்லை. என்திறமை மீது நம்பிக்கைவைத்து சொன்னேன் அது போல கடுமையாக உழைத்து ஆடினேன். அதன் காரணமாக இப்போது 32 ஆவது இடத்தில் உள்ளேன். நான் நினைத்ததை சாதித்து விட்டேன் என்று கூறினார். மேலும் அவர் பேசுகையில் என்னுடைய இலட்சியம் அத்தோடு முடிந்து போகவில்லை உலக தரவரிசைப் பட்டியலில் 15 ஆவது இடத் துக்குள் வரவேண்டும்என்பது தான் என்னுடைய அடுத்த இலட்சியமாக இருக்கிறது. அதற்காக நான் கடுமையாக முயற்சி செய்து வருகிறேன் 15 ஆவது இடத்துக்குள் வரவேண்டும் என்கிற இலட்சியத்தின் மீது கண் வைத்து விட்டேன். 15 ஆவது இடம் என்ன 10 ஆவது இடத்துக்குள் கூட என்னால் வரமுடியும். ஆனால் எத்தனை காலத்திற்குள் இதை நான் சாதிப்பேன் என்றுகாலவரையறை வைத்துசொல்ல முடியாது என்றும் தெரிவித்தார்.

உங்களுடைய அடுத்த இலட்சியத்தை அடைய செய்துவரும் முயற்சிகள் என்ன என்ற கேள்விக்குப் பதில் அளித்த அவர் நான் ஆடும் போது சில தவறுகள் செய்கிறேன். அதை திருத்திக்கொள்வேன் குறிப்பாக என்னுடைய சர்வீசில் இன்னும் திறமை காட்டவேண்டி இருக்கிறது என்று பதிலளித்தார்.

இந்த படப்பிடிப்புக்கு சானியாமிர்சாவுடன் அவருடைய தாயார் நசீமா வந்திருந்தார். சானியாவுக்கு ஜெய்ப்பூர் கழகம் சார்பாக நேற்று மாலை பாராட்டு விழா நடத்தப்பட்டது. அதிலும் இருவரும் கலந்துகொண்டார்கள். அடுத்து சானியாமிர்சா அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் கலந்து கொள்ள இருப்பதாகவும், அதற்கென பிரத்தி யேகமான பயிற்சியாளரை அவருடைய தந்தை தேர்வு செய்து வருவதாகவும் ஒரு தகவலை வெளியிட்டார்.

சானியாமிர்சா தனது உடல்நிலையினை பற்றி குறிப்பிடும்போது தாய்லாந்து ஓப்பன் டென்னிஸ் 2ஆவது சுற்றில் முதுகுவலி காரணமாக விளையாட முடியாமல் வெளியேறியதை நினைவுபடுத்தி வருத்தப்பட்டார். என்னுடைய உடல்நிலையை இன்னும் அதிகஅளவில் கவனிக்க வேண்டி இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

## சிந்தனைக்கு



எதிரியை விட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 22.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## அது அவர்களின் வழி..!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈ.பி.டி.பி குழுத்தலைவர் டக்ளஸ் தேவானந்தா குறித்துக் கடும் விசனம் அடைந்துள்ளதாகவும், டக்ளஸ் தேவானந்தா கொள்கைக்கு மாறான சுயநல அடிப்படையிலும், நன்றிஉணர்வற்ற ரீதியிலும் செயற்படுவது போன்றும் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. அதாவது விசனத்தையும், ஆதங்கத்தையும் ஈ.பி.டி.பி.யில் உள்ள தனது நம்பிக்கைக்குரிய ஒரு வரிடம் அவர் தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது. ஆனால் எந்தவகையில் பார்த்தாலும் சனாதிபதி சந்திரிகாவின் இவ் விசனமும் ஆதங்கமும் அர்த்தமற்றதொன்றே. ஏனெனில், சனாதிபதி சந்திரிகா அரசியலையும், ஈ.பி.டி.பி போன்ற பச்சோந்திக்குழுக்களையும் சரிவரப்புரிந்து கொள்ளாதமையுமே அவர் இத்தகைய விசனமடைவதற்கும் ஆதங்கப்படுத்துவதற்கும் காரணமாகும்.

அரசியலைப்பெறுத்து நிரந்தர நண்பனும் இல்லை பகைவனும் இல்லை என்பது பொதுவானதொரு சித்தாந்தமாகும் மேலோட்டமாக இச்சித்தாந்தம் ஈ.பி.டி.பி.போன்றவர்களுக்குப் பொருத்தப்பாடான தொன்றெனச்கூறிக்கொள்ளக் கூடியதாயினும் அடிப்படையில் இவர்களுக்கு இது பொருத்தப்பாடானதா என்ற கேள்வியும் உள்ளது. ஏனெனில் இச் சித்தாந்தம் என்பது அரசியல் வாதிகளுக்கே ஒழிய அடிவருடிகளுக்கும் தேச விரோதிகளுக்கும் ஆனதல்ல சலுகைகளுக்காகவும் சுகபோகத்திற்காகவும் செயற்படுபவர்களை எவ்வாறு அரசியல்வாதிகள் என்ற வரைபுக்குள் கொண்டுவர முடியும்?

டக்ளஸ் தேவானந்தா சனாதிபதி சந்திரிகாவை உதறித்தள்ளி விட்டு மகிந்தவிடம் ஓடியது ஒன்றும் எதிர்பார்க்கமுடியாததல்ல கடந்த காலத்தில் ஐக்கியதேசியக்கட்சியுடன் ஒட்டுன்னிகள்போன்று இருந்து தமிழ் மக்களின் பெயரில் உறுஞ்சிக்கொண்டிருந்தவர்கள் – சந்திரிகா ஆட்சி அதிகாரத்தைக்கைப்பற்றியபோது ஐ.தே.க.விடம் இருந்து கழன்று வந்து சந்திரிகாவுடன் ஒட்டிக்கொண்டார்கள்.

இவர்களுக்குச் சிறிலங்கா அரசியலில் இருபாத்திரங்கள் இருந்தன. ஒன்று சிங்கள அரசில் பங்கேற்கும் 'தமிழ் பிரதிநிதிகள்' என்ற ரீதியில் சர்வதேசத்தின் முன்சிங்களப் பேரினவாத ஒடுக்கு முறையாளரின் நடவடிக்கைகளை மூடிமறைப்பதற்கு உதவிபுரிதல் இரண்டாவது சிறிலங்கா அரசின் இராணுவ நட்வடிக்கைகளுக்கு அதாவது இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு தகவல் வழங்குபவர்களாக, காட்டிக்கொடுப்பவர்களாகச் செயற்படுவது.

இவர்கள் ஐ.தே.க. காலத்திலும் இதையே செய்தார்கள் பொ.ஐ.முன்னணி காலத்திலும் அதையே செய்தார்கள் ஐ.ம.சு.முன்னணி காலத்திலும் அவ்வாறே செயற்படுகின்றனர். ஆகையினால் தற்பொழுது அரசியலைவிட்டு ஒதுங்கவேண்டிய சூழ்நிலையில் தாம் இருக்கையில் அவர்கள் தம் பின்னால் வருவார்கள் எனச் சந்திரிகா குமாரதுங்க எதிர்பார்ப்பது தவறான மதிப்பீடாகும்.


சிலவேளை சனாதிபதி சந்திரிகா தாம் ஈ.பி.டி.பி. குழுத்தலைவருக்கு அளித்த சலுகைகள் அதீத உதவிகள் போன்றவற்றால் அவர் தன்னைவிட்டு விலகிச்செல்லமாட்டார். விசுவாசமிக்கவராக இருப்பார் எனச் சந்திரிகா குமாரதுங்க சிலவேளை நம்பி இருத்தல் கூடும் ஆனால் இவ்வாறு எதிர்பார்ப்பதும் தவறானதே.

ஏனெனில் தாம் பிறந்து வளர்ந்த மண்ணிற்கும், தன்னை வளர்த்து ஆளாக்கிய இனத்திற்குமே துரோகம் செய்யவிளைந்தவர்களே ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா குழுவினர். இவர்களிடமிருந்து நன்றி விசுவாசம்என்பதை எதிர்பார்ப்பதற் கில்லை. 'நக்குண்டார் நாவிழந்தார்' என்று நற்பண்புள்ள மக்களுக்கே பொருந்தத்தக்கது. உண்டவீட்டிற்கு இரண்டகம் செய்பவர்களிடம் இதனை எதிர்பார்க்கமுடியாது.

அடுத்ததாக கொள்கையை விட்டு அதாவது ஈ.பி.டிபியினர் கூறிக்கொண்ட மத்தியில் கூட்டாச்சி மாகாணத்தில் சுயாட்சி என்பதைக்கைவிட்டு ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற நிலைப்பாட்டை ஆதரிக்க முன்வந்தமையினால் கொள்கையற்று செயற்படுவதையும் சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டுள்ளதாக அறிய வருகிறது.

ஆனால் இவ்வாறு கூறுவதற்கு எந்தவித அடிப்படையுமேஇல்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் ஆட்சிக்காலத்தில் பெரும்பகுதிவரை ஒற்றையாட்சி முறைபற்றியே பேசியுள்ளார். தனது ஆட்சிக்காலத்தின் இறுதியிலேயே அவர் சமஷ்டிமுறைபற்றி பேசினார். ஆனால். இந்நிலையில் ஈ.பி.டி.பி.யினர் சந்திரிகா குமாரதுங்கவை ஆரம்பம் முதலே ஆதரித்தனர். ஆகையினால் கொள்கை வேறுபாடுஎன்பதல்லாம். ஈ.பி.டி.பி.யினருக்கு முக்கியமான தல்ல ஈ.பி.டி.பி.யின் அரசியல் கொள்கை என்பது வெறும் பேச்சுக்கானதே அவ்வாறு இல்லாதுவிட்டால் தனியரசு ஒன்றிற்காகப் போரிடப்போவதாகக் கூறிக்கொண்டு புறப்பட்டவர்கள் எவ்வாறு ஒடுக்கு முறையாளர்களின் ஏவலாளர்களாக, அடிவருடிகளாக தமது மக்களையும் அவர்களின் உரிமைப்போராட்டத்தையும் காட்டிக்கொடுக்கும் இனவிரோதிகளாக மாற முடியும்.?

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா இவை குறித்தெல்லாம் ஆதங்கப்படுவதோ விசனம் அடைவதோ அவரின் தவறான மதிப்பீட்டின் அடிப்படையாகவே இருக்கமுடியும். சிலவேளை சனாதிபதி சந்திரிகா தான் வழங்கிய மிதமிஞ்சிய சலுகைகளுக்காக எத்தகையவேளையிலும் தன்பின்னால் இவர்கள் நிற்பார்கள் என எதிர்பார்த்திருப்பாரேயானால் அவர் பாத்திரம் அறியாது பிச்சை போட்டுவிட்டதாக கவலை கொள்வதைத்தவிரவேறு வழியேதுமில்லை




# எழுச்சி நாள் நிகழ்வில் பெண்களும் உணர்வு பூர்வமாக பங்கேற்க வேண்டும்

## திருமலை தமிழ் மகளிர் அமைப்புக்கள் கோரிக்கை

திருகோணமலை நகரில் சனிக் கிழமை நடைபெறும் தமிழ்தேசிய எழுச்சி நாள் நிகழ்வில் பெண்கள் உணர்வுபூர்வமாக பங்கு பற்றி உரிமைக்குரலை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட தமிழ் மகளிர் அமைப்புக்கள் ஒன்றியம அறிக்கை மூலம் கோரியுள்ளது.

"தமிழினத்தின் உரிமைக்குரல் ஓங்க பெண்கள் ஓரணியாகத் திரண்டு எழுந்து தமிழ்தேசிய எழுச்சி நாளில் ஒற்றுமையாகப் பங்கு பற்ற வேண்டும். தாயகம், தேசியம் சுய நிர்ணயம் சுதந்திரம், இறைமை யாவும்எமக்கு உரிமையானது என் பதைச் சர்வதேச சமூகத்திற்கு நியாயப்படுத்த வேண்டும். எமது பலம் கண்டு எதிரி ஓடி ஒதுங்கட்டும். மண்ணின் விடுதலை பெண்ணின் விடு தலை என்ற உண்மைக்கு அமைவாக பெண்கள் எல்லோரும் புறப்படுவோம். எமது உரிமைக் குரலை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவோம் என்றும் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பணிமனை திறப்பு!

(திருகோணமலை)

தமிழ் தேசியக் கூட்டணியின் தலைமைப் பணிமனை நேற்று வெள்ளிக்கிழமை மாலை திருகோணமலை நகரில் ஔவையார் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. முதலில் ஈகச்சுடரை யாழ். மாவட்டப பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா (இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர்) ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுவின் தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகமுமான இரா.சம்பந்தன் ஏற்றினார். தலைமைப் பணிமனை யின் பெயர்ப் பலகையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

பணிமனையை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஆகியோர் கூட்டாக நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர். அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திறப்பு நிகழ்வில் அரியநேத்திரன், கஜேந்திரன், சிவநேசன் ஜெயானந்தமூர்த்தி, திருமதி பத்மினி சிதம்பரநாதன், செல்வி.க.தங்கேஸ்வரி, ச.கனகரட்ணம், ஈழவேந்தன், வினோநோகராதலிங்கம் உட்பட பதினைந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (25)

# தேர்தலின் போது காவல் துறைக்கு இராணுவம் உதவி அளிக்கும்!

## இராணுவத் தளபதி சாந்த கொட்டே கொட

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் நாளில் வன்முறைகளைக் கட்டுப் படுத்த சிறிலங்கா காவல்துறைக்கு உதவியாக சிறிலங்கா இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று இராணுவத் தளபதி சாந்தகொட்டே கொட தெரிவித்துள்ளார். வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களுக்கான பாதுகாப்பினை வழங்குவது காவல் துறையினரின் கடமை என்பதால் வாக்களிப்பு நிலையங்களிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் இராணுவத்தினர் நிறுத்தப்படுவார்கள். தெற்கின் பாதுகாப்பிற்காக வடக்கு கிழக்கில் இருக்கும் இராணுவத்தினரை வரவழைக்கப் போவதில்லை என்றும் அதற்கென மேலதிக படையணி ஈடுபடுத்தப்படும் என்றும் கூறினார்.

வடக்கு கிழக்கில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் சிறிலங்கா காவல்துறைக்கு உதவியாக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவார்கள். அதற்கென அங்கு போதுமான அளவு பாதுகாப்புப் படையினர் உள்ளனர் என்றும் இராணுவத் தளபதி சாந்தகொட்டே கொட மேலும் கூறினார்.

# ரணிலை வெளிப்படையாக ஆதரிக்கும் காவல் துறை மீது நடவடிக்கை தேவை!

## அமைச்சர் மங்கள சமரவீர கோரிக்கை

சிறிலங்கா காவல்துறையில் ரணில் விக்கிரமசிங்கவை வெளிப் படையாக ஆதரிக்கும் குழுவினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல்துறை மா அதிபரிடம் அமைச்சர் மங்கள சமரவீர முறைப் பாடு செய்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் மங்கள சமரவீர கூறியதாவது:-

சிறிலங்கா காவல்துறையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் தேர்தல் அலுவலகங்களின் செயற்பாட்டைத் தடுத்து வருகின்றனர்.

ராஜகிரிய பகுதியின் உதவி காவல் துறை கண்காணிப்பாளர் ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபை உறுப்பினரின் உறவினர், இவர் வெளிப் படையாகவே மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அலுவலகங்களின் செயற்பாட்டைத் தடுத்து வருகின்றார். அவர் தான் ரணில் விக்கிரம சிங்கவின் பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவராகவும் நீண்ட காலம் பொறுப்பில் உள்ளார்.

இத்தகைய அதிகாரிகள் நாட்டின் தேர்தல் திணைக்கள விதிகளை மீறிச் செயற்படுகின்றனர். இத்தகைய அதிகாரிகளுக்கு எதிரான சட்ட பூர்வ நடவடிக்கையை அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கின் கீழ் எதிர் கொள்ள நேரிடும் எனவும் தெரிவித்தார்.

### –கிளி. நகரில் ஒரு மணிநேர மழை வீழ்ச்சி–

# வீதியை ஊடறுத்துப் பாய்ந்த வெள்ளம்!

# வர்த்தக நிலையங்களுக்குள்ளும் புகுந்தது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் நேற்றுப் பிற்பகல் சுமார் ஒரு மணிநேரம் பெய்த கனமழைகாரணமாக வெள்ளம் வீதிகளை ஊடறுத்துப் பாய்ந்ததுடன் வியாபார நிலையங்கள் பலவற்றில் உட்புகுந்தமையினையும் காணக் கூடியதாக இருந்தது.





படங்கள்:-சோதி

நேற்றுப் பிற்பகல் பெய்த கடும் மழை காரணமாக கிளிநொச்சி பிரதேச சபைக்கு அருகாமையிலுள்ள உண வகம் மற்றும் நகைத் தொழிலகம் ஆகியவற்றினுள் மழை வெள்ளம் உட்புகுந்ததுடன் கிளிநொச்சிப் பொதுச் சந்தையின் ஒரு பகுதி வெள்ளத்தினால் சூழப் பட்டிருந்தமையினையும் அவ தானிக்கமுடிந்தது.

மற்றும் கிளிநொச்சி டிப்போச் சந்தியில் ஏ.9 பிரதான வீதியினை மழை வெள்ளம் ஊடறுத்துப் பாய்ந்ததுடன் வீதிக்கருகிலிருந்த பாரிய மரம் பிரதான வீதியின் குறுக்காக அடியோடு சாய்ந்ததன் காரணமாக போக்கு வரத்துக்கள் யாவும் சிலமணிநேரம் பாதிப்புக் குள்ளானது.

கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக்கழக ஊழியர் களினால் சில மணி நேரத்தில் மேற்படிமரம்வீதியில்இருந்து அப்புறப் படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து போக்குவரத்துக்கள் நடைபெற்றன.

குறிப்பாக கிளி நகரம் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் வடிகால் அமைப்புக்கள் சீரின்மை காரண மாகவே மழை நீர் வழிந்தோட முடியாத நிலையில் தேக்கம் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிட வேண்டிய தொன்றாகும்.

நேற்றுப்பெய்த ஒரு மணி நேர மழைக்கேஇந்த நிலையெனில் இனிவரும் மழைகாலங்களில் வெள்ளத்தால் இப்பகுதிகளிலுள்ள வீதிகள் கடைகள் யாவும் பாதிப்புக் குள்ளாக வேண்டிய ஏது நிலைக்குள் ளாவது தவிர்க்க முடியாத தாகிவிடும்.ஆகையினால் உடன டியாக வடிகால்கள் அமைக்கும் பணிகளை சம்பந்தப்பட்டவர்கள் முனைப்புடன் செயற்படுத்த முன்வர வேண்டுமென வியாபார நிலையத் தினர், பொதுச் சந்தை வர்த்தகர்கள் , மற்றும் பொதுமக்கள் வேண்டி யுள்ளனர். (சோ)

## ஐக்கிய நாடுகள் சபையின்

## அறுபதாவது ஆண்டு நிறைவுவிழா

(அலுவலகசெய்தியாளர்)

ஐக்கிய நாடுகள் சபையின் 60ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 24 ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் கொண்டாடப் படவுள்ளது.

வன்னிப் பிராந்தியத்திலுள்ள ஐ.நா அபிவிருத்தி நிறுவனம், ஐ.நா சிறுவர் பாதுகாப்பு நிதியம், ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம், உலக தொழிலாளர் நிறுவனம், உலக உணவுத்திட்டம், ஐ.நா. மனித நேய நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நிறுவனம், உலக உணவு விவசாய நிறுவனங்கள் மற்றும் வன்னிப்பிராந்திய அரச,அரசசார்பற்ற நிறுவனங்களின்முக்கிய பிரதி நிதிகள்மேற்படி நிகழ்வில்கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## தேசிய வீடமைப்புத்துறை

## அமைச்சராக டிலான் பெரேரா

சிறிலங்காவின் தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப் புத்துறை காபினட் அமைச்சராக டிலான்பெரேரா நியமிக்கப் பட்டுள்ளார்.

ஊடகம் மற்றும் விமானம்-துறை முகத்துறை பிரதி அமைச்சராகவும் டிலான் பெரேரா நீடிப்பார் என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜ பக்ஷ ஜே.வி.பி கூட்டணியைக் கடுமையாக எதிர்த்து வருபவர் டிலான் பெரேரா சந்திரி காவின் தீவிர ஆதர வாளராகவும் கருதப்படுபவர்.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றும் செயற்பாடு கட்டியெழுப்பப்பட வேண்டும்

——— சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்ற வேண்டிய செயற் பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டி யுள்ளதாக சனாதிபதி சந்திரிகா தெரி வித்துள்ளார்.

அகில இலங்கை மாகாணத் தலைவர்மற்றும் பிரதித் தலைவர் சம் மேளனம் நேற்று முன்தினம் ஆறா வது தடவையாகவும் சனாதிபதி மாளி கையில் சனாதிபதியின் தலை மையில் கூடியபோது அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கூறுகையில் இத்தேர்தல் மிகவும் தீர்க்கமானதொரு தேர்த லாகும். விசேடமாக நாட்டிற்கும் சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கும் மிகவும் தீர்க்கமானதொரு தேர்தல் கட்சியின் மீதுபற்றுள்ளவர்கள்கட்சிக்காக அடிவாங்கிச்சிறைக்குச் சென்ற வர்கள் உள்ளனர். பல விடயங்ளை இங்குநான்பேசவில்லை உங்க ளுக்குத் தெரியும் மற்றைய கட்சி களிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியைகாப்பற்றும் செயற்பாட்டைக் கட்டி யெழுப்பவேண்டியுள்ளது. பண்டார நாயக்க குடும் பத்தினருக்கு என்றும் அரசியலில் இருக்க வேண்டும் என்று சிந்தனையில்லை எனக்கு மில்லை. எனது பிள்ளைகளையும் அரசியலுக்கு வர விடமாட்டேன். உங்களுக்கு அந்த உறுதி மொழி யைத் நான்வழங்குவதாகவும் எனது குடும்பம் அரசியல்காரணமாக மேலும்கஷ்ரப்படவிடமாட்டேன் தற்போது இருவர் மாத்திரமே எஞ்சியுள்ளோம்.ஒன்று கொன்று விடுவார்கள். அல்லது வேறு ஏதேனும் செய்வார்கள் எமது கட்சிக்குள்ளேயே கொல்லவும் இட முண்டு. அதனால் பண்டாரநாயக்க குடும்பத்தினரை வைத்துக்கொண்டு அரசியலை செய்ய வேண்டுமென்ற நோக்கம் எனக்கு என்றுமில்லை எனவும் சனாதிபதி அவர்கள் தெரி வித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மூளைசாலிகளின் வெளி யேற்றம் நாட்டில் குறைவடைந்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார். இந்த நாட்டில் திறமை வாய்ந்த அரசியல் தலைவர்களாக இருந்த இராஜதந்திர அதிகாரிகளாக இருந்தவர்களுடன் 70 வீதமானோர் இன்று வெளிநாடு களிலுள்ளனர். அல்லது கொல்லப் பட்டுள்ளனர்.

வெளிநாடுகளிலுள்ளவர்கள் கடந்த மூன்றரை வருடகாலமாக உள்ள இந்தப்போர்நிறுத்த உடன் படிக்கையினால் மீண்டும் இலங்கை வர ஆரம்பித்துள்ளனர். இந்நிகழ்வின் போது சனாதிபதி தனது பதவிக் காலத்தில் ஆற்றிய சேவையை கௌரவிக்கும் வகையில் பரிசில் களும்வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வருமுன் காப்போம் நடவடிக்கை

(திருகோணமலை)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் குடியிருப்புக்களில் தங்கியிருக்கும் மக்கள் மழைகாலம் ஆரம்பித்திருப்பதால் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்து அவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகும் நிலை உருவாகியுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினால் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிறகுட்பட்ட கூவா நகர், (பைசல் நகர்) ஆலங்கேணி கிராமங்களில் தற்காலிக வீடுகளில் தங்கியிருக்கும் 150 குடும்பங்களுக்கு வருமுன் காப்பு நடவடிக்கையாக பிளாஸ்டிக் கூரைவிரிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை காலை 10.00 மணிக்கு தம்பலகாமம், கிண்ணியா பிரதேச இணைப்பாளர் சு.நல்லசிவம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கூவாநகரில் 80 கூரைவிரிப்புக்களும், ஆலங்கேணியில் 70கூரை விரிப் புக்களும், மொத்தம்150 பிளாஸ்டிக் கூரைவிரிப்புக்கள் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் கிராம சேவகர், நெக்டெப் திட்ட இணைப்பாளர் க.பிரசாந்தன், அரச அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள். தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள், பொது மக்களெனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### கைக்குண்டு...

கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அப்போது வீட்டில் இருந்த துவான் ரஜீம் காசிம், கதிரேசன் நித்யகலாம் மற்றும் தர்மதாஸ் ராஜ சிவகுமாரன் ஆகியோர் கைது செய்யப்பட்ட தாகவும் காாவல்துறையினர் விசா ரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே வெள்ளவத் தையில் உரிய அடையாள அட்டைகள் இல்லாத நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் விசார ணைக்காகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

### யாழ்.பேருந்து...

சுற்றி வளைத்துப் பெருமளவான இராணுவத்தினரும் காவல் துறையினரும் நிறுத்தி வைக்கப்பட்ட பின்னரே இந்தச் சோதனை நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவல்ஒன்றையடுத்தே இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள் வதாக படையினர் தெரிவித்திருந்த தாகத்தெரிவிக்கப்பட்டது. (37)

### யுவதியின்...

கொழும்பில் தனக்கு நடை பெறவிருந்த திருமண நிச்சய தார்த்தத்திற்குச் செல்வதற்கென யாழ். நகரிலுள்ள வங்கி யொன்றில் குறித்த பணத்தொகையை வைப்புச் செய்து விட்டு, கொழும்பில் சென்று எடுப்பதற்காக பணத்தைஎடுத்து வந்த வேளையிலேயே திருட்டுப் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையிலிருந்து யாழ். நகர் நோக்கி வந்த தனியார் பேருந்து ஒன்றில்இருபாலைச் சந்தியிலிருந்து ஏறிய யுவதி நகருக்கு வந்தபோதே பணம்திருட்டுப் போனதை அறிந்தார். பேருந்து ஓட்டுநர் பேருந்தை யாழ். பொலிஸ் நிலையத் திற்கு விட்டு, பொலிசார் சோதனையை மேற் கொண்ட போதும் திருட்டுப்போன பணம் மீளப்பெறப் படவில்லை. (37)

### நோர்வே...

தீப்பந்தங்களை ஏந்தியவாறு நோர்வே பாராளுமன்றத்தைப்பேரணி சென்றடைந்தது. நோர்வேயின் புதிய கூட்டணி அரசாங்கத்தின் தலைமைக் கட்சியான தொழிலாளர் கட்சியின் ஒஸ்லோ பிரதேசத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன் போலர் மற்றும் வெளியுறவு அரசியல் செயற்குழுவின் பேச்சாள் ஓகத் வல்லா ஆகியோர் மனுவைப் பெற்றுக்கொண்டனர். தமது தலை விதியைத் தாமே தீர்மானிக்க வேண்டுமென்ற தமிழீழ மக்களின் விடுதலை வேணவாவிற்கு வலுச் சேர்க்கும் பொருட்டு, ஒஸ்லோ மா நகரில் அணிதிரண்ட நோர்வே வாழ் தமிழீழ மக்களின் ஒருமித்த உணர் வெழுச்சியின் குரலாய் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனம் ஒன் றையும் வெளியிட்டனர்.

### தமிழ்தேசிய...

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், துரைரெட்ணசிங்கம் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தச்சந்திப்பு கிழக்குப் பிராந்திய காவல்துறை மாஅதிபரின் அலு வலகத்தில் இடம்பெற்றுள்ளது. சனிக் கிழமை இடம்பெறவுள்ள எழுச்சி நிகழ்வுகளுக்கு தாம் பூரண ஒத்து ழைப்பை வழங்குவதாகவும். அதே சமயம் தேவையான பாதுகாப்பை வழங்குவதாகவும் படைத்தரப்பி னரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### காணாமல்...

பதவிக்காலம் முடிகின்ற கால கட்டம் நெருங்கியுள்ள போதும் அவரது பதவிக்காலத்தில் காணா மல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்ற விபரம் அரசாங் கத்தால் வெளியிடப்படவில்லை.

இந்த நிலைமைகளை ஆட்சே பித்தே நேற்றுக் காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் வரையில் இந்த மறியல் போராட்டம் நடத்தப் பட்டது.

காணாமல் போனோரது பெற் றோர் பாதுகாவலர்கள் நூற்றுக் கணக்கானோர் இணைந்து நடத்திய இந்தப் போராட்டத்தினால் யாழ்-செய லகப் பணிகள் பெரிதும் பாதிப் படைந்தன.

இதேவேளைஇப் போராட்டத் தின் முடிவில் காணாமல் போனோரது உறவுகளால் யாழ்-அரச அதிபர் கே. கணேஷ் ஊடாக சனாதிபதி சந்திரி காவுக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது. (33)

### இராணுவ...

இந்தப் பணிக்காலம் நீடிக்கப் படாவிட்டால் அவரும் ஓய்வு பெறக் கூடும். இதனால் அந்த இரண்டு உயர் இராணுவ அதிகாரிகளுக்கு மேலும் ஆறு மாத பதவிக்கால நீடிப்பை உடனடியாக அளிக்க அமைச்சகம் ஏற்கனவே கோரியிருந்தது. ஆனால் சந்திரிகா குமாரதுங்கா முதலில் இந்தக் கோரிக்கைகளை நிராகரித் தனர்.

பின்னர் இரு அதிகாரிகளின் பதவி நீடிப்புக்காலத்தை குறிப் பிடாமல் மீண்டும் சந்திரிகாவுக்கு தற்போது கோப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கோப்புக் களின் மீது எதிர்வரும் வாரங்களில் சந்திரிகா முடிவினை அறிவிக்கக் கூடும் என்று பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.